# கொங்குநாடு முன்னேற்றக் கழகம்

பதிவு எண் – 983/2001

# கொள்கை - குறிக்கோள்
# சட்ட திட்டங்கள்
# 2010

தலைமைக் கழக வெளியீடு– 1




**தலைமை அலுவலகம்**

46, சம்பத் நகர், ஈரோடு – 638 011.

கொங்குநாடு, தமிழ்நாடு.

கொங்கு செழித்தால்
எங்கும் செழிக்கும்

முடியும் முடியும்
நம்மால் முடியும்

# கொங்குநாடு முன்னேற்றக் கழகம்

பதிவு எண் - **983/2001**

கொள்கை - குறிக்கோள்
சட்டதிட்டங்கள்

**2010**

தலைமைக் கழக வெளியீடு


தலைமை அலுவலகம்.

**No - 46 -** சம்பத் நகர், ஈரோடு. **638 011.**

| விதி எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | பெயர் | 3 |
| 2 | குறிக்கோள் | 3 |
| 3 | கோட்பாடு | 3 |
| 4 | கொடி | 3 |
| 5 | உறுப்பினர் | 3 |
| 6 | உறுப்பினர் கட்டணம் | 5 |
| 7 | கிளைகள் | 5 |
| 8 | ஊராட்சிக் கழகம் | 6 |
| 9 | பேருராட்சிக் கழகம் | 6 |
| 10 | நகர – நகரிய கழகம் | 7 |
| 11 | ஒன்றிய கழகம் | 8 |
| 12 | மாவட்ட கழகம் | 8 |
| 13 | மாநகர கழகம் | 9 |
| 14 | பொறுப்புகள் | 10 |
| 15 | தலைமைக் கழகம்: பொதுக்குழு | 11 |
| 16 | கழகத் தலைவர் | 12 |
| 17 | பொதுச் செயலாளர் | 12 |
| 18 | பொருளாளர் | 13 |
| 19 | துணைப் பொதுச் செயலாளர்கள் | 13 |
| 20 | தலைமைக் கழகச் செயலாளர்கள் | 13 |
| 21 | தலைமைச் செயற்குழு | 13 |
| 22 | தலைமை நிர்வாகக் குழு | 14 |
| 23 | தலைமை நிலையம் | 14 |
| 24 | உயர்நிலை செயல் திட்டக்குழு | 14 |
| 25 | தனிக்கைக்குழு | 14 |
| 26 | சொத்து பாதுகாப்புக் குழு | 15 |
| 27 | ஆச்சி மன்றக் குழு | 15 |
| 28 | கழகத் தேர்தல் | 15 |
| 29 | கழகத் துணை அமைப்புக்கள், சார்பு மன்றங்கள் | 17 |
| | இளைஞர் அணி | 17 |
| | மகளிர் அணி | 18 |
| | மாணவர் அணி | 18 |
| | தொழிலாளர் அணி | 18 |
| | விவசாய அணி | 18 |
| | விவசாயத் தொழிலாளர் அணி | 18 |
| | வழக்கறிஞர் அணி | 19 |
| | மருத்துவர் அணி | 19 |
| | பொறியாளர் அணி | 19 |
| 30 | மாநாடுகள் (மாவட்ட மாநாடு) | 19 |
| | பொது மாநாடு | 19 |
| | சிறப்பு மாநாடு | 20 |
| | சிறப்பு நிகழ்ச்சி | 20 |
| 31 | கூட்டம் நடத்த தேவைப்படும் குறைந்த எண்ணிக்கை (கோரம்) | 20 |
| 32 | கூட்டம் நடத்துவதற்கு அழிக்க வேண்டிய அறிவிப்பு கால அளவு | 20 |
| 33 | விலகல் | 20 |
| 34 | நம்பிக்கை இல்லா தீர்மானம் | 21 |
| 35 | ஒழுங்கு நடவடிக்கை | 21 |
| 36 | பொதுக்குழு உரிமை | 23 |

# கொங்குநாடு முன்னேற்றக் கழகம்

## பதிவு எண் - **983/2001**

## கொள்கை - குறிக்கோ**œ** - சட்டதிட்டங்கள்

**விதி : 1** பெயர்

அமைப்பின் பெயர் "கொங்குநாடு முன்னேற்றக் கழகம்" ஆகும். "கழகம்" என்னும் சொல் இனி வரும் இடங்களிலெல்லாம் (வேறு பொருளில் குறிப்பிட்டாலன்றி) கொங்குநாடு முன்னேற்றக் கழகம். **KONGUNADU MUNNETRA KAZHAGAM. (K.M.K** – கொ.மு.க.) என்பதையே குறிக்கும்.

**விதி : 2** குறிக்கோள்

தமிழ்நாட்டில் இந்திய அரசுரிமை ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு தமிழகத்தின் முன்னேற்றத்திற்கும் குறிப்பாக கொங்கு மண்டலத்தின் முன்னேற்றத்திற்கும் அதன் விவசாய வளர்ச்சிக்கும், விவசாயிகளின் பாதுகாப்பிற்கும், தொழில் துறையின் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவது; அரசியல் நிர்ணயச் சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச்சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும், பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக் காப்பது என்பது கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் ஆகும்.

**விதி : 3** கோட்பாடு

உண்மை - உழைப்பு - உறுதி - அடிப்படையில், அரசியலில் உண்மையாகவும், ஜனநாயகத்தை பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தைமைத்திடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும் பணியாற்றுவது

**விதி : 4** கொடி

கழகக் கொடி நீள - அகலத்தி (3 : 2 விகிதத்தில்) மேல்பாதி 4 பங்கு அளவில் பச்சை நிறமாகவும், கீழ்பாதி 4 பங்கு அளவில் சிவப்பு நிறமாகவும் சம அளவில் இருக்கும். மத்தியில் மஞ்சள் நிறம் 2 பங்கு அளவில் இருக்கும்.

**விதி : 5** உறுப்பினர்

பிரிவு **: 1** கழகக் குறிக்கோளையும் கோட்பாடுகளையும் ஏற்று கழகச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதாக உறுதி தரும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் - பெண் இருபாலருக்கும் உறுப்பினராகும் தகுதி உண்டு.

பிரிவு **: 2** வேறு ஏதாவது அரசியல் கட்சியில் உறுப்பனராக உள்ளோர் கழகத்தின் உறுப்பினராக இருக்கும் தகுதியடையோர் அல்லர்.

பிரிவு **: 2**அ பொதுச்செயலாளரின் அறிவிப்பின்படி உறுப்பினர்கள் சேர்ப்பது, புதுப்பிப்பது ஆகிய பணிகள் நடைபெறும் காலகட்டத்தில், வேறு அரசியல் கட்சியிலிருந்து விலகி கழகத்தில் உறுப்பினர்களாகச் சேறுவோர், அடுத்து நடைபெறவிருக்கின்ற கிளைக் கழகத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையற்றவர்கள் ஆவர். இதில் விதிவிலக்கு அளிக்கும் உரிமை கழகத் தலைமைக்கு உண்டு.

பிரிவு : **3** தலைமைக் கழகத்தால் அச்சிடப்பட்ட உறுப்பினர் பதிவுத் தாளில் உறுப்பினராகச் சேர விரும்புவோர் பெயரும் மற்ற உரிய விபரங்களும் பதிவு செய்யப்பட்டு அந்தப் பகுதி மேலமைப்புச் செயலாளர்கள் கையொப்பம் பெற்று உரிய கட்டணத்துடன் தலைமை அலுவலகத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். தாளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டு முறைப்படி தலைமைக் கழக அலுவலகத்தில் பதிவு செய்த நாளில் இருந்து உறுப்பினராகக் கருதப்படுவர்.

பிரிவு : **4** தனி உறுப்பினர் பதிவுத்தாளில் சம்பந்தப்பட்ட கிளையின் நிர்வாகிகள், அந்தப் பகுதி மேலமைப்பின் நிர்வாகிகள், மாநில அமைப்புக் கழக நிர்வாகிகள், அந்தந்தப் பகுதியைச் சார்ந்த மாவட்டப் பிரதிநிதிகள், மாநகர் மாவட்டப் பகுதிப் பிரதிநிதிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அந்தந்தப் பகுதியைச் சார்ந்த சட்டமன்ற கழக உறுப்பினர்கள், நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் இதற்கு முன்னதாக நடைபெற்ற கழகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்கள் (முன்னால் செயலாளர்) ஆகியோர் பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட படிவங்கள் தலைமை அலுவலகச் செயலாளரால் பரிசீலனை செய்யப்பட்டு உறுப்பினராக பதிவு செய்யப்படுவார்கள். பரிந்துரைக் கையொப்பமிடுபவர் தன் பொருப்பு பற்றிக் குறிப்பிட வேண்டும். இந்தப் பரிந்துரை மீது ஏற்றுக்கொள்ளபடும் உறுப்பினர்கள், தகுதியற்றவர்களாகவோ, போலியானவராகவோ தெரியவந்தால் முறையான பரிசீலனைக்குப் பின் பரிந்தரை செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிரிவு : **5** உறுப்பினர் பதிவுத் தாளில், கையெழுத்துப் போடத்தெரியாதவர்கள் மட்டுமே இடது கைப் பெற்விரல் குறி (கைரேகை) வைக்கலாம். ஆனால் அந்த ரேகையுடன் பரிந்துரை செய்தவரின் கையொப்பமும் அதில் இருக்க வேண்டும். கைரேகை இட்ட உறுப்பனர்களைக் குறித்து ஐயம் எழுப்பப்பட்டால், பரிந்துரை செய்தவரே அதனை நிரூபிக்கும் பொருப்பினை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பிரிவு : **6** குறிப்பிட்ட கிளையில் உறுப்பினராகச் சேரவிரும்புவோர், அந்தந்த கிளைகுட்பட்ட முகவரியில் இயல்பாகக் குடியிருப்பவராக இருக்க வேண்டும். தனது இயல்பான முகவரியுள்ள இடத்தில் கழகக் கிளை அமையாதிருந்தால் மட்டுமே அருகாமையிலுள்ள கழகக் கிளையில் தம்மைக் கழக உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ளலாம்.

பிரிவு : **7** புதிதாக அமையும் கிளைகள் தவிர, ஏற்கெனவே இயங்கும் கிளைகளில் சேர்க்கப்படும் உறுப்பினர் பதிவு விண்ணப்பத்தாள், முதலாவதாகப் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் கையொப்பமிட்ட ஒரு மாதத்திற்குள் அந்தத்தாளில் சேர்க்கப்பட்ட உறுப்பினர் அளவில் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட வேண்டும். (ஒருதாளில் 25 பேர் சேர்ந்த பிறகே அனுப்ப வேண்டும் என்று காலங்கடத்துவது கூடாது).

பிரிவு : **7**அ தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் உறுப்பினர் அடையாள அட்டையை உரிய செயலாளர் அல்லது அமைப்பாளர் அல்லது பொருப்பாளர் ஒரு வார காலத்திற்குள் உறுப்பினர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

பிரிவு : 8 உறுப்பினராகச் சேர்வதிலும், உறுப்பினரைச் சேர்ப்பதிலும் தலைமைக் கழகம் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

பிரிவு : **9** ஒருவர் ஒரு கிளையில் மட்டுமே உறுப்பனராக வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட படிவத்திலோ அல்லது கிளைகளிலோ, உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டு தேர்தலின் போது இரு கிளைகளிலும் வாக்களித்திருந்தால், அந்த வாக்குகள் செல்லாது என்பதோடு அவர் அந்த தேர்தல்களில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ உரிமையற்றவராவார்.

பிரிவு : **10** தகுந்த காரணங்கள் இருப்பின் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு தமது உறுப்பினர் உரிமையை மாற்றிக் கொள்ள விரும்புகிறவர்கள், தாம் உறுப்பனராக உள்ள கிளையின் செயலாளருடைய ஒப்புதலோடும், மாறிச் சேர விரும்பும் கிளையின் செயலாளருடைய ஒப்புதலோடும் தனியாக உறுப்பனர் மாறுதல் கட்டணமாக ரூ. 100/= (ரூபாய் நூறு) தலைமைக் கழகத்திற்கு செலுத்தி மாற்றிக் கொள்ளவேண்டும். தகுந்த காரணமின்றி இரு செயலாளர்களில் யாரேனும் மறுப்பார்களேயானால், மாவட்டச் செயலாளருக்கு விண்ணபித்து மாற்றிக் கொள்ளலாம்.

பிரிவு : **11** கழகப் பொதுத் தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்பட்டதிலிருந்து தேர்தல்கள் முடியும்வரை உள்ள இடைக்காலத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை நிறுத்தி வைக்கப்படும்.

## விதி : **6** உறுப்பினர் கட்டணம்

பிரிவு : 1 உறுப்பினர் கட்டணமாக ரூ. 10/= (பத்து ரூபாய்) செலுத்த வேண்டும்.

பிரிவு : 2 உறுப்பினர் கட்டணமாகச் செலுத்தும் முழுத் தொகையையும் உறுப்பினர் விண்ணப்பத்தாளுடன் உரிய செயலாளர் அல்லது அமைப்பாளர், அல்லது பொருப்பாளர் அல்லது உறுப்பினர் சேர்க்க உரிமை வழங்கப்பெற்றவர் பரிந்துரையுடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். போலி உறுப்பினர்களைச் சேர்த்துப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தால் அந்தப் பரிந்துரையாளரும், உறுப்பனர் சேர்த்தவரும் கழகத் தேர்தலில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ உரிமையற்றவர் ஆவார்.

## விதி : 7 கிளைகள்

பிரிவு : 1 கிராமங்களில் அமையும் கிளை ஊர் கிளை எனவும், பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும், நகரியங்களிலும், மாநகரங்களிலும் அமையும் கிளைகள் (வார்டு கிளை அல்லது டிவிஷன் கிளைகள்) வார்டு கிளைகள் எனவும் அழைக்கப்படும்.

பிரிவு : 2 ஊர்கிளை என்பது ஒரே ஊராட்சியாக உள்ள அமைப்பில் உட்பிரிவுகளாக உள்ள - அரசு ஆவணங்கள் அல்லது வாக்காளர் பட்டியல்படி தனிப் பெயரோடும் எல்லையோடும் விளங்கும் ஊர்களில் அமைக்கப் பெறுவது ஊர் கிளையாகும். தேவைப்படும் பகுதிகளுக்கு இந்த ஊர் விபரப் பட்டியல் கட்சித் தேர்தலின்போது தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படும்.

### வார்டு கிளை

பிரிவு : 3 பேரூராட்சி நகரியம், நகராட்சி மாநகராட்சி, வார்டுகள் அல்லது டிவிசன்கள் தோறும் அமையப் பெறுவது வார்டு கிளையாகும்.

பிரிவு : 4 இருபத்தைந்து பேர்களுக்கு (25) குறையாத உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பைத்தான் ஒரு கிளையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரிவு : 5 ஒவ்வொரு ஊர்க்கிளையின் அல்லது வார்டு கிளையின் பொது உறுப்பினர்கள் ஒன்று கூடி அவர்களுக்குள் அவைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய நான்கு அலுவலர்களையும் தேர்தல் நடைபெறும் நாளன்று கிளையில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த உறுப்பனர்களுக்கேற்ப ஒரு நூறு (100) அதற்குக் குறைவாக உறுப்பனர்களைக் கொண்ட கிளைகள் மேலமைப்புக்கு ஒரு பிரதிநிதியையும் பத்து (10) செயற்குழு உறுப்பினர்களையும், ஒரு நூறுக்கு (100) மேற்ப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட கிளைகள் மேலமைப்புக்கு இரண்டு பிரதிநிதிகளையும் பதினைந்து (15) செயற்க்குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். நிர்வாகிகள், மேலமைப்புப் பிரதிநிதிகள் தேர்தலைத் தொடர்ந்து கிளையின் செயற்க்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற்றாக வேண்டும். செயற்குழு தேர்தல் நடைபெறாத கிளைகளுக்கு மேலமைப்பிற்கு வாக்களிக்கும் உரிமை ரத்து செய்யப்படுவதோடு மேலமைப்புப் பிரதிநிதிக்கான அடையாள அட்டையும் வழங்கப்படமாட்டாது.

பிரிவு : 6 கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் குறைந்தது 6 மாதங்களுக்கு ஒரு முறையும், செயற்குழு கூட்டம் 2 மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டப்பட வேண்டும். கூட்டப்படும் கூட்டத்தின் நடவடிக்கைகளை மேலமைப்புக்கும், தலைமைக் கழகத்திற்கும் படிகள் (நகல்கள்) எடுத்துக் கிளைச் செயலாளர் அனுப்ப வேண்டும். மேற்படி கூட்டங்கள் முறைப்படி கூட்டப்படாவிட்டால் மேலமைப்புக்கு அந்தக் கூட்டங்களை கூட்டுவதற்கு உரிமையுண்டு.

பிரிவு : 7 ஊர்க்கிளைகள் ஊராட்ச்சி கழக செயலாளர் மூலமாகவும் – வார்டு கிளைகள் தாம் இடம் பெற்றுள்ள பேரூர் செயலாளர் மூலமும் – இவை இரண்டும் ஒன்றியக் கழகச் செயலாளர் மூலமும் – நகர – நகரிய – வார்டு கிளைகள் – நகர – நகரிய கழகச் செயலாளர் மூலமும் – மாநகர வார்டு கிளைகள் – பகுதி கழகச் செயலாளர் மாநகரக் கழகச் செயலாளர் மூலமும் பொதுவாக மேல் அமைப்புக்களுடன் முறையாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

பிரிவு : 8 ஒவ்வொரு கிளையும், துணை அமைப்பும், சார்பு மன்றமும் ஆண்டுக்கு இரண்டு முறையேனும் பிரச்சாரப் பொதுக்கூட்டம் அல்லது கலைநிகழ்ச்சி நடத்த வேண்டும். அவ்வாறு நடத்தாத கிளை, துணை அமைப்பு, சார்பு மன்றம் அதற்கான காரணத்தை மேலமைப்பிற்கும், மாவட்டக் கழகத்திற்கும் தெரிவிக்க வேண்டும்.

## விதி : 8 ஊராட்ச்சி கழகம்

பிரிவு : 1 ஊராட்ச்சிகளில் (கிராம பஞ்சாயத்துக்களில்) அமைவதே ஊராட்ச்சிக் கழகமாகும்.

பிரிவு : **2** ஊர்க்கிளை நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், ஊராட்ச்சிக் கழகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் சேர்ந்து ஊராட்ச்சிக் கழக உறுப்பினர்கள் ஆவார்கள்.

பிரிவு : **3** ஊராட்ச்சிக் கழக உறுப்பினர்கள் ஒன்றுகூடி, அவைத்தலைவர், செயலாளர், பொருளாளர், மூன்று துணைச் செயலாளர்கள் ஆகிய ஆறு (6) நிர்வாகிகளையும், ஒன்றியப் பிரதிநிதிகளாக ஐந்து (5) பேரையும், மாவட்டப் பிரதிநிதிகளாக இரண்டு (2) பேரையும், இவர்களைத் தவிர செயற்குழு உறுப்பினர்களாக எட்டு (8) பேரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஊராட்ச்சிக் கழகத்தின் செயலாளர் அந்தத் தகுதியினாலேயே மாவட்டப் பிரதிநிதியாகவும், ஒன்றியப் பிரதிநிதியாகவும் ஆவார்.

பிரிவு : **4** ஊர்க்கிளைகளின் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், மேலமைப்பு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே ஊராட்ச்சிக் கழக செயற்குழு உறுப்பினர் பொருப்பிற்கு போட்டியுடும் தகுதி பெற்றவராவர்.

பிரிவு : **5** ஊராட்ச்சிக் கழகச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் மூலம் பொதுவாக மேல் அமைப்புகளுடன் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரிவு : **6** ஊராட்ச்சிக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு முறையும், ஊராட்ச்சிக் கழகக் கூட்டம் 4 மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டப்பட வேண்டும். அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளைப் படியெடுத்து (நகல் எடுத்து) மேலமைப்பிற்கும், தலைமைக்கழகத்திற்கும் ஊராட்ச்சிக் கழகச் செயலாளர் அனுப்பவேண்டும். முறைப்படி இக்கூட்டங்கள் கூட்டப்படாவிட்டால் அந்தக் கூட்டங்களைக் கூட்டுவதற்கு மேலமைப்பிற்கு உரிமையுண்டு.

பிரிவு : **7** ஊராட்ச்சி கழகத்தின் அவத்தலைவர், செயலாளர், துணைச்செயலாளர்கள், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு அந்தந்த கிராம ஊராட்ச்சியைச் சார்ந்த தகுதியுடைய உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

பிரிவு : **8** ஊராட்ச்சிக் கழக (பிரிவு 7 இல் குறிப்பிட்ட பதவிகள் தவிர மற்ற) பொருப்பிற்கு போட்டியிடுவோர் கழகத்தில் உட்கிளை நிர்வாகிகளாகவோ மேலமைப்புப் பிரதிநிதிகளாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அவர்கள் ஊராட்ச்சிக்கழகத்திற்கு உட்பட்ட ஊர்க்கிளைகளில் நடைமுறைகால உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

பிரிவு : **8** அ : தேர்தல் நடத்த குறைந்தபட்ச உறுப்பினர்கள் ஊர்க்கிளைகள் மற்றும் பேரூராட்சி வார்க்கிளைகளில் 100 உறுப்பினர்களுக்கு குறையாமலும், நகராட்சி வார்க்கிளைகளில் 250 உறுப்பினர்களுக்கு குறையாமலும் சேலம், ஈரோடு, திருப்பூர் மாநராட்சிக்கு உட்பட்ட வார்டு கிளைகளில் ஒரு வார்டுக்கு குறைந்த பட்சம் 300 உறுப்பினர்களுக்கு குறையாமலும், கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு கிளைகளில் ஒரு வார்டுக்கு குறைந்த பட்சம் 500 உறுப்பினர்களுக்கு குறையாமலும் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

பிரிவு : **9** ஊராட்ச்சிக் கழகத்திற்கு உட்பட்ட ஊர்க்கிளைகளை இயங்க வைப்பது ஊராட்ச்சிக் கழகத்தின் பொருப்பு ஆகும்.

பிரிவு : **10** குறைந்தது ஒரு ஊராட்ச்சிக்கு (கிராம பஞ்சாயத்திற்கு) பத்து (10) ஊர்க் கிளைகள் அமைந்தால் மட்டுமே ஊராட்ச்சிக் கழகமாக ஏற்றுக்கொள்ளப்படும். பத்து ஊர்க்கிளைகளுக்கு குறைவாக அமைந்துள்ள ஊராட்ச்சிக் கழகத்தின் தேர்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, பொதுச்செயலாளர் தேர்வுக்குப்பின் சம்மந்தப்பட்ட ஊராட்ச்சிக் கழகத்திற்குப் பொருப்பாளர் அல்லது பொருப்புக்குழு நியமிக்கப்படும். வேவைப்படும் கிளைகள் அமைந்த பின் ஊராட்ச்சிக் கழகத் தேர்தல் நடைபெரும். அதுவரை அந்த ஊராட்ச்சிக் கழகத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றியக்கழகத் தேர்தலில் வாக்களிக்க உரிமையற்றவர்களாவர்.

## விதி : 9 — பேரூராட்சிக் கழகம்

பிரிவு : **1** பேரூராட்சிப் பட்டணங்களில் அமைவதே பேரூர்க் கழகமாகும்.

பிரிவு : **2** பேரூராட்சிப் பட்டணங்களில் விதி எண் 7 பிரிவு 3 இல் கண்டுள்ளபடி அமையும் வார்டுக்கிளைகளின் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், வார்டுக்கிளைகளில் பேரூர் கழகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் சேர்ந்து பேரூர்கழகத்தின் பிரதிநிதிகள் ஆவர். பேரூர்கழகத்தின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி, அவைத்தலைவர், செயலாளர்,

பொருளாளர், துணைச் செயலாளர்கள் மூன்று (3) பேர் ஆகிய ஆறு அலுவலர்களையும், ஒன்றியப் பிரதிநிதிகளாக ஐவரையும், இரண்டு மாவட்டப் பிரதிநிதிகளையும், இவர்களைத் தவிர செயற்குழு உறுப்பனர்களாக எட்டுப் (8) பேர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். பேரூர்க் கழகத்தின் நிர்வாகப் பொறுப்பிற்கும், ஒன்றியப் பிரதிநிதி பொறுப்பிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்தத் தகுதியினாலேயே பேரூர்க் கழகச் செயற்குழு உறுப்பினராவர். பேரூர் கழகத்தின் செயலாளர் அந்தத் தகுதியிலேயே மாவட்டப் பிரதிநிதியாகவும், ஒன்றியப் பிரதிநிதியாகவும் ஆவர்.

பிரிவு **: 3** உட்கிளைகளின் நிர்வாகப் பொறுப்புடையவர்களாகவோ, மேலமைப்புப் பிரதிநிகளாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே பேரூர் கழகத்தின் செயற்குழு உறுப்பனர் பொறுப்பிற்கு போட்டியிடும் தகுதி பெற்றவர் ஆவர்.

பிரிவு **: 4** பேரூர்க் கழகச் செயலாளர் ஒன்றியச் செயலாளர் மூலம் பொதுவாக மேல் அமைப்களுடன் நேரடித் தொடர்புகளை முறையாகக் கொள்ள வேண்டும்.

பிரிவு **: 5** பேரூர்க் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் குறைந்தது 2 மாதத்திற்கு ஒரு முறையும், பேரூர்க் கழகக் கூட்டம் 4 மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டப்பட வேண்டும். அந்த கூட்டத்தின் நடவடிக்கைகளை மேலமைப்புக்கும், தலைமைக் கழகத்திற்கும் படிகள் (நகல்கள்) எடுத்துக் பேரூர் கழகச் செயலாளர் அனுப்ப வேண்டும். முறைப்படி இக்கூட்டங்கள் கூட்டப்படாவிட்டால் மேலமைப்புக்கு அந்தக் கூட்டங்களை கூட்டுவதற்கு உரிமையுண்டு.

பிரிவு **: 6** பேரூர் கழகத்தின் அவைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு அந்தந்தப் பேரூரைச் சார்ந்த தகுதியுடைய உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படலாம், ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்ட பேரூர்க் கழக வார்டுகளுக்கு உட்பட்ட கிளைகளில் நடைமுறை கால உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

பிரிவு **: 7** பேரூர்க் கழகத்திற்கு உட்பட்ட வார்டு கிளைகளை இயங்க வைப்பது பேரூர்க் கழகத்தின் பொறுப்பாகும்.

பிரிவு **: 8** குறைந்தது 10 வார்டு கிளைகள் அமைந்தால் மட்டுமே பேரூர்க் கழகமாக ஏற்றுக் கொள்ளப்படும். 10 வார்டுக் கிளைகளுக்கு குறைவாக அமைந்துள்ள பேரூர்க் கழகத்தின் தேர்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, பொதுச் செயலாளர், தேர்வுக்குப்பின் சம்பந்தப்பட்ட பேரூர்க் கழகத்திற்குப் பொறுப்பாளர் அல்லது பொறுப்புக்குழு நியமிக்கப்படும். தேவைப்படும் கிளைகள் அமைந்த பின் பேரூர்க் கழகத் தேர்தல் நடைபெறும். அதுவரை அந்த பேரூர்க் கிளைகள் சம்பந்தப்பட்ட ஒன்றியக் கழகத் தேர்தலில் வாகுகளிக்க உரிமையற்றவராவர்.

## விதி **: 10** நகர - நகரியக் கழகம்

பிரிவு **: 1** நகர - நகரியங்களுக்குட்பட்ட வார்டு கிளைகளில் செயலாளராகவும், பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சேர்ந்து நகரக் கழகத்தின் உறுப்பினர்களாக அமைவர். நகரக் கழகத்தின் உறுப்பனர்கள் ஒன்றுகூடி, நகரக் கழகத்திற்கான அவைத்தலைவர், செயலாளர், பொருளாளர் துணைச் செயலாளர்கள் 3 பேர் ஆகிய ஆறு அலுவலர்களையும், இவர்களுடன் மக்கள் தொகை 50,000 க்கு உட்பட்ட நகரமாக இருந்தால் ஒரு (1) பிரதிநிதியும், 1 லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்கள் இரண்டு (2) பிரதிநிதிகளையும், 1 லட்சத்திலிருந்து 1-1/2 லட்சம் வரை உள்ள மக்கள் தொகை கொண்ட நகரங்கள் மூன்று (3) பிரதிநிதிகளையும், 1-1/2 லட்சத்திலிருந்து 2 லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்கள் நான்கு (4) பிரதிநிதிகளையும், அதற்கு மேற்கொண்ட மக்கள் தொகை கொண்ட நகரங்கள் ஐந்து (5) பிரதிநிதிகளையும் மாவட்டக் கழகத்திற்கு தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டப் பிரதிநிதிகளுக்கான தேர்தல் நடைபெற்றதும், நகரக் கழகத்தின் அலுவலர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழுவிற்கு மொத்தம் 21 பேர் ஆக அமையுமாறு - மீதமுள்ள எண்ணிக்கைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்டு நகரக் கழக செயற்குழு அமையும். நகரக் கழக அலுவலர்களாகவும், மாவட்டப் பிரதிநிதிகளாகவும் அந்தந்த நகரத்தைச் சேர்ந்த தகுதி படைத்த உறுப்பினர்கள் யாரும் தேர்ந்தெடுக்கப்படலாம். நகரக் கழக அலுவலர்களாகவும், மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் அந்தத் தகுதியினாலேயே அவர்கள் நகரக் கழகப் பிரதிநிதிகளாகவும் ஆவர். நகரக் கழகச் செயலாளர் அந்தத் தகுதியினாலேயே மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆவர்.

பிரிவு **: 2** விதி 7 பிரிவு 4 இன்படி வார்டு கிளைகளைக் கொண்டு நகரிய – நகரக் கழகமாக அமையும். நகரங்களின் மொத்த வார்டுகளில் நான்கில் மூன்று பங்குக்குக் (75%) குறையாமல்

வார்டு கிளைகள் அமைக்கப் பெறும் நகரங்களின் செயலாளர்கள் மட்டுமே, நகர – நகரியக் கழகச் செயலாளர் என்ற தகுதியினாலேயே பொதுக்குழு உறுப்பினராக ஆவர்.

பிரிவு **: 3** நகர - நகரியக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் குறைந்தது 2 மாதத்திற்கு ஒரு முறையும், நகர - நகரியக் கழகக் கூட்டம் 4 மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டப்பட வேண்டும். கூட்டப்படும் கூட்டத்தின் நடவடிக்கைகளை மேலமைப்புக்கும், தலைமைக் கழகத்திற்கும் படிகள் (நகல்கள்) எடுத்து நகர - நகரியக் கழகச் செயலாளர் அனுப்ப வேண்டும். மேற்படி கூட்டங்கள் முறைப்படி கூட்டப்படாவிட்டால் மேலமைப்புக்கு அந்தக் கூட்டங்களை கூட்டுவதற்கு உரிமை உண்டு.

பிரிவு **: 4** நகர - நகரியக் கழகத்திற்கு உட்பட்ட வார்டு கிளைகளை இயங்க வைப்பது நகர - நகரியக் கழகத்தின் பொறுப்பாகும்.
பிரிவு **: 5** நகர - நகரியக் கழகங்கள் இயங்குவதற்கு அந்தந்த நகர - நகரியத்தில் அலுவலகம் கட்டாயம் இருக்க வேண்டும்.

## விதி **: 11** <u>ஒன்றியக் கழகம்</u>

பிரிவு **: 1** குறைந்தது 10 கிளைகளைக் கொண்ட ஒவ்வொரு ஒன்றியத்திலும் (பஞ்சாயத்து யூனியன்) ஓர் ஒன்றியக் கழகம் அமையும்.

பிரிவு **: 2** குறிப்பிட்ட ஒன்றியத்திலுள்ள ஊர்க்கிளைகளின் செயலாளர்கள், கிளையின் பிரதிநிதிகள், பேரூர்க் கழகத்தின் செயலாளர்கள், பேரூர்க் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்படும் ஒன்றிய பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்றியக் கழகத்தின் உறுப்பினர்களாவர்.

பிரிவு **: 3** ஒன்றியக் கழக உறுப்பினர்கள் ஒன்று கூடி ஒன்றியக் கழகத்திற்கு அவைத்தலைவர், செயலாளர், பொருளாளர், துணைச் செயலாளர்கள் 3 பேர் ஆகிய ஆறு (6) அலுவலர்களையும், மாவட்டக் கழகத்திற்கு 3 பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும். அடுத்து ஒன்றியக் கழக அலுவலர்கள் மாவட்டப் பிரதிநிதிகள் உள்ளிட்ட செயற்குழுவிற்கு மொத்தம் 21 பேர் ஆக அமையுமாறு – மீதமுள்ள எண்ணிக்கைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றியக் கழக செயற்குழு அமையும்.

பிரிவு **: 4** ஒன்றியக் கழக செயலாளர் அந்தத் தகுதியினாலேயே மாவட்டக் கழக பிரதிநிதியா வார்.

பிரிவு **: 5** இருபத்தைந்துக்கு (25) குறைவில்லாமல் கிளைகள் அமையப் பெறும் ஒன்றியங்களின் செயலாளர்கள் மட்டுமே ஒன்றியச் செயலாளர் என்ற தகுதியினாலேயே பொதுக்குழு உறுப்பினராகவும் ஆவர். இதில் நியாயமான முறையீடுகள் வரப்பெற்றால் அதனை ஆய்வு செய்து விதிவிலக்கு அளிக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு.

பிரிவு **: 6** முற்றிலும் மலைசூழ்ந்த பகுதிகளில் அமைந்துள்ள ஒன்றியங்களில் 5 கிளைகள் அமைந்தால் ஒன்றியக் கழகம் அமைக்கலாம். அத்தகு ஒன்றியங்களில் 10 கிளைகள் அமைந்த பின்பே அந்த ஒன்றியச் செயலாளர் அந்த தகுதியினாலேயே பொதுக்குழு உறுப்பினராகவும் ஆவர்.

பிரிவு **: 7** ஒன்றியக்கழக அவைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர், ஒன்றியக் கழகத்தின் மாவட்டப் பிரதிநிதிகள் ஆகிய பதவிகளுக்கு அந்தந்த ஒன்றியத்தைச் சார்ந்த தகுதியுடைய உறுப்பினர்கள் எவரும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

பிரிவு **: 8** ஒன்றியக் கழகக் கூட்டம் குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு முறையும், ஒன்றியக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டப்பட வேண்டும். அந்தக் கூட்டங்களின் நடவடிக்கைகளை படிகள் (நகல்கள்) எடுத்து மேலமைப்புக்கும், தலைமைக் கழகத்திற்கும் ஒன்றியக் கழகச் செயலாளர் அனுப்ப வேண்டும். மேற்படி கூட்டங்கள் முறைப்படி கூட்டப்படாவிட்டால் மேலமைப்புக்கு அந்தக் கூட்டங்களை கூட்டுவதற்கு உரிமை உண்டு.

பிரிவு **: 9** ஒன்றியக் கழக அலுவலகம் பொதுவாக ஒன்றியத்தின் தலைநகரில் அமைய வேண்டும். தக்க காரணங்களால் விதிவிலக்கு வேண்டப்படின் மாவட்டச் செயலாளரிடம் அனுமதி பெற வேண்டும்.

பிரிவு **: 10** ஒன்றியத்திலுள்ள கிளைகளை இயங்க வைப்பது ஒன்றியக் கழகதின் பொருப்பாகும்

## விதி : 12 ஒருங்கிணைந்த மாவட்டக் கழகம் / மாவட்டக் கழகம்

பிரிவு : 1 அரசின் வருவாய் மாவட்டங்களின் எல்லை அடிப்படையில் அமைந்துள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஒருங்கிணைந்த மாவட்டக் கழகம் அமையும்.

பிரிவு : 1 அ : பொதுச்செயலாளர் நிர்வாக வசதிக்கேற்ப அரசின் வருவாய் மாவட்டங்களை முறையே கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என பெயரிட்டு மாவட்டத்தைப் பிரித்து நிர்வகிக்களாம். அவ்வாறு பிரித்து செயல்படும் மாவட்டக் கழகங்களுக்கு விதி 12 இன் சரத்துக்கள் அனைத்தும் பொருந்தும்.

பிரிவு : 2 சென்னை, சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை திருச்சி மாநகர் மாவட்ட கழகங்கள் நீங்களாக மற்ற மாவட்டங்களில் ஊராட்சி, பேரூராட்ச்சி, ஒன்றிய - நகர - நகரியக் கழகங்களின் செயலாளர்களும், அவற்றால் தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டப் பிரதிநிதிகளும், அந்தந்த மாவட்டக் கழகத்தின் உறுப்பினராவார்கள்.

பிரிவு : 3 மாவட்டக் கழக உறுப்பினர்கள் ஒன்றுகூடி மாவட்டக் கழகத்திற்கென ஒரு அவைத்தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர், துணைச் செயலாளர்கள் மூவர் (3) ஆகிய ஆறு (6) அலுவலாளர்களையும் அந்தந்த மாவட்டத்தில் எத்தனை வட்டங்கள் (தாலுக்கா) உண்டோ அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப அத்தனைப் பொதுக்குழு உறுப்பினர்களையும், அந்தந்த மாவட்டத்தில் எத்தனை கோட்டங்கள் (ரெவின்யூ டிவிஷன்) உண்டோ அந்த எண்ணிக்கைக்கேற்ப அத்தனை தலைமைச் செயற்குழு உறுப்பினரையும் மாவட்டக் கழகப் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் தலைமைச் செயற்குழு உறுப்பிர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள் அந்தத் தகுதியினாலேயே பொதுக்குழு உறுப்பினர்களாகவும் ஆவர்.

பிரிவு : 4 மாவட்டக் கழகச் செயலாளர், அந்தத்தகுதியினாலேயே பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் ஆவார்.

பிரிவு : 5 மாவட்ட அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கு அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த தகுதியுடைய உறுப்பினர்கள் எவரும் தேந்தெடுக்கப்படலாம்.

பிரிவு : 6 மாவட்டக் கழகத்தின் அலுவலர்களும், மாவட்டத்தின் ஒன்றியக் கழக - நகர - நகரியக் கழகம், பேரூர்க் கழகம் ஆகியவற்றின் செயலாளர்களும், அந்தந்த மாவட்டத்தின் பொதுக்குழு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்களும் அடங்கியது மாவட்ட கழகச் செயற்குழுவாகும்.

பிரிவு : 7 மாவட்டக் கழகக் கூட்டம் குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு முறையும், செயற்குழுக் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டப்பட வேண்டும். கூட்டப்படும் அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளை படிகள் (நகல்கள்) எடுத்து தலைமைக் கழகத்திற்கு மாவட்டச் செயலாளர் அனுப்ப வேண்டும். மேற்படி கூட்டங்கள் முறைப்படி கூட்டப்படாவிட்டால் கூட்டங்களை கூட்டுவதற்கு மேலமைப்புக்கு அந்த உரிமையுண்டு.

பிரிவு : 8 மாவட்டக் கழகத்தின் அலுவலகம் மாவட்டத்தின் தலைநகரில் அமைய வேண்டும். தக்க காரணங்கலால் விதிவிலக்கு வேண்டப்படின் பொதுச்செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும்.

பிரிவு : 9 மாவட்டக் கழகத்திலுள்ள ஒன்றியக் கழகம் - நகர, நகரியக் கழகம் ஆகியவற்றையும், ஒன்றிய - நகர - நகரிய - பேரூர்க் கழகங்கள் - ஊராட்ச்சிக் கழகங்கள் மூலமாக ஊர்க்கிளை - வார்டுக் கிளையும் இயங்க வைப்பது மாவட்டக் கழகத்தின் பொறுப்பு.

## விதி : 13 மாநகரக் கழகம்

பிரிவு : 1 சென்னை, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், திருச்சி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் மாநகரக் கழகங்கள் அமையும்.

பிரிவு **: 2** மாநகராட்சிக்குட்பட்ட ( டிவிஷன்கள் ) ஒவ்வொன்றிலும் ஒரு வார்டுக் கிளை அமையும். ஒவ்வொரு வார்டுக் கிளையும் குறைந்த்து 100 (நூறு) உறுப்பினர்களைக் கொண்டதாய் அமையவேண்டும்.

பிரிவு **: 3** வார்டுக் கிளையின் பொது உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஒரு அவைத்தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர், துணைச் செயலாளர்கள் மூவர் (3) ஆகிய ஆறு (6) அலுவலர்களையும், மேலமைப்பிற்கு (பகுதிக் கழகத்திற்கு) ஐந்து (5) பிரதிநிதிகளையும், பத்து (10) செயற்குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். வார்டுக் கிளைக் கழகச் செயலாளர் அந்தத் தகுதியினாலேயே பகுதிக் கழக உறுப்பினராகவும், மாநகரக் கழகப் பிரதிநிதியாகவும் ஆவார்.

பிரிவு **: 4** எல்லைத் தொடர்பு அடிப்படையில் மாநகரங்களில்களில் பகுதிக் கழகங்கள் அமையும்.

பிரிவு **: 5** பகுதிக் கழகத்திற்கு அந்தந்தப் பகுதிக்குட்பட்ட வார்டுக் கிளையின் செயலாளர்களும், வட்டக் கிளையால் தேர்ந்தெடுக்கப்படும் பகுதிப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாவர்.

பிரிவு **: 6** பகுதிக் கழகத்தின் உறுப்பினர்கள் ஒன்றுகூடி, ஒரு அவைத்தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர், துணைச் செயலாளர்கள் ஆகிய அலுவலர்களையும், மேலமைப்பான மாநரக் கழகத்திற்கு ஐந்து (5) மாநகரப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும். பகுதிக் கழக நிர்வாகிகள் அந்தத் தகுதியினாலேயே மாநகரப் கழகப் பிரதிநிதியாவர். பகுதிக் கழகச் செயலாளர் அந்தத் தகுதியினாலேயே பொதுக்குழு உறுப்பனராவர்.

பிரிவு **: 7** பகுதிக் கழக நிர்வாகிகளும், அந்தந்தப் பகுதியின் வார்டுக் கிளைச் செயலாளர்களும் அடங்கியது பகுதிக் கழகச் செயற்குகுழுவாகும்.

பிரிவு **: 8** பகுதிக் கழக அலுவலளர் பொறுப்புகளுக்கும், பகுதிக் கழகத்தின் மாநகரக் கழகப் பிரதிநிதி பொறுப்புகளுக்கும் அந்தந்தப் பகுதியைச் சார்ந்த தகுதியுடைய எந்த உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

பிரிவு **: 9** பகுதிக் கழகச் செயற்குழுக் கூட்டம் குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு முறையும், பகுதிக் கழகக் கூட்டம் குறைந்த்து 3 மாதங்களுக்கு ஒரு முறையும் கூட்டப்பட வேண்டும். அப்படி கூட்டப்படும் கூட்டத்தின் நடவடிக்கைகளை படிகள் (நகல்கள்) எடுத்து மேலமைப்பிறகும் தலைமைக் கழகத்திற்கும் பகுதிச் செயலாளர் அனுப்ப வேண்டும். மேற்படி கூட்டங்கள் முறைப்படி கூட்டப்படாவிட்டால் கூட்டங்களை கூட்டுவதற்கு மேலமைப்புக்கு அந்த உரிமையுண்டு.

பிரிவு **: 10** பகுதியில் உள்ள வார்டுக் கிளைகளை இயங்க வைப்பது பகுதிக் கழகத்தின் பொறுப்பாகும்.

பிரிவு **: 11** கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு ஆகிய மாநகரங்களின் வார்டுக் கிளைச் செயலாளர்களும், அந்தந்த மாநகரங்களுக்குட்பட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்படும் மாநகரப் பிரதிநிதிகளும் அடங்கியது மாநகரக் கழகமாகும்.

பிரிவு **: 12** மாநகரக் கழக உறுப்பினர்கள் ஒன்றுகூடி, மாநகரத்திற்கென அவைத்தலைவர், செயலாளர், பொருளாளர், துணைச் செயலாளர்கள் மூவர் ஆகிய அலுவலர்களையும், ஒருங்கிணைந்த மாவடக் கழகத்தற்கு பத்து (10) மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பிரிவு **: 13** மாநகரக் கழக நிர்வாகிகளும், வார்டுக் கிளைச் செயலாளர்களும், மாநகர் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்டக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்படும் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களும் அடங்கியது மாநகரக் கழகச் செயற்குழுவாகும்.

பிரிவு **: 14** மாநகரக் கழகச் செயலாளர் அந்தத் தகுதியினாலேயே தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினராகவும் ஆவர். மாநகரக் கழக நிர்வாகிகள் அந்தத் தகுதியினாலேயே மாவட்டப் பிரதிநிதிகளாகவும், தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும் ஆவர்.

## விதி **: 14** பொருப்புகள்

பிரிவு **: 1** தலைவர் **:** பொது உறுப்பினர் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவைகளுக்குத் தலைமை ஏற்று நடத்திக் கொடுத்தல் வேண்டும். செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர் ஆகியோர் இல்லாத சமயங்களில் அவர்களது பொறுப்புக்களையும் அந்த இடைக்காலத்தில் மட்டும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

பிரிவு **: 2** செயலாளர் **:** அந்தந்த அமைப்புகளின் நிர்வாகப் பொறுப்புகள் அனைத்தையும் செயலாளர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

பிரிவு **: 3** துணைச் செயலாளர்கள் **:** செயலாளரால் தரப்படும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதுடன், செயலாளர் இல்லாத சமயங்களில் துணைச் செயலாளர்கள் செயலாளர் பொறுப்புக்களை அந்த இடைக்காலத்தில் மட்டுமே மேற்கொள்ளுதல் வேண்டும்.

பிரிவு **: 4** தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் தானாக விலகினாலோ ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விலக்கப்பட்டாலோ அல்லது இயற்கை எய்தி விட்டாலோ அந்தப் பொறுப்புகளுப் பொறுப்பாளரை நியமிக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு. அவ்வாறு

நியமிக்கப்பட்டவர் நியமிக்கப்படும் பொறுப்புக்கேற்ப அந்தப் பொறுப்புகுரிய தகுதிகள் உரிமைகள் அனைத்தும் பெற்றவர் ஆவார்.

பிரிவு **: 5** பொருளாளர் **:** கழகத்தின் சார்பில் திரட்டப்படும் நிதியை வைத்துக் காப்பாற்றுதல், செயற்குழுவும், செயலாளரும் கோரும் செலவினங்களுக்குக் கழக இருப்பிலிருந்து தொகை கொடுத்தல், அவற்றின் வரவு செலவு கணக்குகளை நிர்வகித்து வருதல், கணக்கு விவரங்களைச் செயலாளர் மூலமாகப் பொது உறுப்பினர் செயற்குழு உறுப்பினர் கூட்டங்களில் வைத்தல் ஆகிய பொறுப்புளை அந்தந்த அமைப்புகளின் பொருளாளர் மேற்கொள்ளுதல் வேண்டும். செயலாளர், துணைச்செயலாளர்கள் ஆகியோர் இல்லாத சமயங்களில் அவர்களது பொறுப்புகளையும் அந்த இடைக்காலத்தில் மட்டும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

பிரிவு **: 6** கழகத்தின் இருப்பு நிதியை அந்தந்த அமைப்பின் செயற்குழு முடிவிற்கேற்ப குறிப்பிடப்படும் வங்கியில் செயலாளர் - பொருளாளர் ஆகிய இருவரின் பெயரால் செலுத்துவதும், எடுப்பதுமான முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பிரிவு **: 7** தலைமைக் கழகத்திற்கான தேர்தல் நடைபெற்று முடியும் வரை, தேர்தலே நடைபெறாத அமைப்புகளுக்கு மட்டுமே தற்காலிகமாகப் பொறுப்பாளர் அல்லது பொறுப்புக் குழு முறைப்படி நியமிக்கப்பட வேண்டும்,

கழகத்தின் பொதுத் தேர்தல் முடிவுற்ற பின் தவிர்க்க முடியாத காரணங்களால் காலியாகும் பொறுப்புகள் அனைத்தும் இடைத் தேர்தல் முலமாகவே நிறைவு செய்யப்பட வேண்டும். செயலாளர் பொறுப்பு மட்டும் விதி (14) - பிரிவு 3 - வின்படி தற்காலிகமாக நிறைவு செய்யப்படும்.

## விதி **: 15** தலைமைக் கழகம் பொதுக்குழு

பிரிவு **: 1** கழகத்தின் முழு அதிகாரம் கொண்ட தலைமை அமைப்பு, பொதுக்குழு ஆகும்.

பிரிவு **: 2** மாநில அமைப்புக் கழகங்களாலும் மாவட்டக் கழகங்களாலும் மாநரக் கழகங்களாலும் தேந்தெடுக்கப்படும் பொதுக்குழு உறுப்பினகளும், தலைமைச் செயற்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களும், தலைமைக் கழக நிர்வாகக் குழுவில் உறுப்பினகளாக இருப்பவர்களும், மாவட்டக் கழக நிர்வாகிகளும், மாநகர நிர்வாகிகளும், மாநில அமைப்புக் கழக நிர்வாகிகளும், தகுதி பெற்ற ஒன்றிய–நகர–நகரியக் கழகச்செயலாளர்களும், பகுதிக்கழகச் செயலாளர்களும், பொதுச்செயலாளர் தேர்வுக்குப் பிறகு, பொதுச்செயலாளர் விரும்பினால் அவரால் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் கொண்டது கழகப் பொதுக்குழுவாகும்.

பிரிவு **: 3** பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றுகூடிக் கழகத்தின் தலைவர் **(President)**, பொதுச்செயலாளர் **(General secretary)**, பொருளாளர் **(Treasurer)** மற்றும் நான்கு தணிக்கைக்குழு உறுப்பினகளை தேர்ந்தெடுப்பார்கள். பின்னர் துணைப் பொதுச்செயலாளர்களாக **(Deputy general secretaries)** தலைவர் - மற்றும் பொதுச்செயலாளர் நியமனம் செய்வார்.

பிரிவு **: 4** கழகப் பொதுக்குழுக் கூட்டம் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற வேண்டும். கழகத் தலைவர் இல்லாதபோது தற்காலிகமாக அதற்கென தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தலைமையில் நடைபெற வேண்டும்.

பிரிவு **: 5** கழகப் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கே உண்டு. தேவைக்கும் நிலைமைக்கும் ஏற்பவோ அல்லது ஆண்டுக்கு ஒரு முறையோ பொதுக்குழுக் கூட்டத்தைப் பொதுச்செயலாளர் கூட்டுவார்.

பிரிவு **: 6** கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற குறைந்த அளவு அதன் மொத்த உறுப்பினகளில் முன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் **(Quaram)** இருக்க வேண்டும்.

பிரிவு **: 7** கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பகுதி எண்ணிக்கையினர் கையெழுத்திட்டுக் கேட்டுக் கொண்டால் பொதுக்குழுவின் தனிக்கூட்டத்தை அறிவிப்புக் கிடைத்த ஒரு மாததிற்குள் பொதுச்செயலாளர் கூட்ட வேண்டும்.

பிரிவு **: 8** கழகக் கொள்கைகளை வகுப்பது - அவற்றை நிறைவேற்ற திட்டங்கள் தீட்டுவது - கழகத்தை நடத்திச் செல்வது போன்ற கழகத்தைப் பொறுத்த எல்லா நடவடிக்கைகளுக்கும் பொதுக்குழுவே முழு அதிகாரம் பெற்றதாகும்.

பிரிவு **: 9** பொதுக்குழுவின் கால அளவு பொதுவாக ஐந்து ஆண்டுகள் எனினும் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் பொதுக்குழு கூடும் வரையில் பொதுக்குழுவின் கால அளவு நீடிக்கும்.

## விதி **: 16** கழகத் தலைவர்

பிரிவு **: 1** பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் கழகத் தலைவர், கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு, தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, பொது மாநாடு, சிறப்பு மாநாடு ஆகியவற்றுக்குத் தலைமை தாங்குவார்.

பிரிவு **: 2** பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பொதுச்செயலாளர், அவருக்கெனச் சட்ட திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பணிகள், கொள்கை சம்பந்தப்பட்ட முடிவுகள், கழகத்தின் நிர்வாகப் பொறுப்புகள் அனைத்தையும் கழகத் தலைவருடன் கலந்து முடிவெடுத்து நிறைவேற்ற வேண்டும்.

பிரிவு **: 3** பொதுச்செயலாளர் விலகினாலோ, அல்லது நீண்ட நாட்களுக்குக் கழகப் பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டாலோ புதிய பொதுச்செயலாளர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில், பொதுச்செயலாளருக்கென சட்டதிட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை கழகத் தலைவரே மேற்கொள்வார்.

## விதி **: 17** பொதுச்செயலாளர்

பிரிவு **: 1** கழகத்தின் நிர்வாகப் பொறுப்புகள் அனைத்தையும் நிர்வகிப்பவர் பொதுச் செயலாளராவார்.

பிரிவு **: 2** பொதுச்செயலாளர் விரும்பினால் **30**க்கும் மேற்படாத உறுப்பினகளை தலைவர் அனுமதியுடன் பொதுக் குழுவில் நியமிக்கும் உரிமை பெற்றவர் ஆவார்.

பிரிவு **: 3** பொதுச்செயலாளர் நிர்வாக வசதிக்காக தேவைக்கேற்ப தலைமைக் கழகத்தின் பல்வேறு துறைக்கான செயலாளர்களை நியமித்துக் கொள்ளலாம்.

பிரிவு **: 4** கழகப் பணிகளை, விரிவாகவும் விரைவாகவும், வகைப்படுத்தியும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, குறிப்பிட்ட நோக்கத்துடன் செயல்படும் தனித்தனிக் குழுக்களையும் அணிகளையும் பொதுச்செயலாளர் அமைக்கலாம்,

பிரிவு **: 5** மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில கழகங்களினால் தேர்ந்தெடுக்கப்படும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட பொறுப்புகளின் காரணமாகத் தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகிப்பவர்கள் ஆகியோருடன் மேலும் பதினைந்து (15) உறுப்பினர் வரை (பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக) கழகப் பொதுச்செயலாளர் விரும்பினால் தலைவர் ஒப்புதலுடன் நியமிக்கலாம்.

பிரிவு **: 6** பொதுச்செயலாளரால் நியமிக்கப்படும் தலைமைச் செயற்குழுவினர், தலைமைக் கழகச் செயலாளர்கள், துணைக் குழுக்களுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஆகியோர்

அந்தப் பொதுச்செயலாளர் பதவியில் உள்ள வரையிலும் அல்லது பொதுச்செயலாளர் விரும்பும் வரையிலும் தமது பொறுப்புகளில் நீடிப்பார்.

பிரிவு **: 7** பொதுக்குழுவையும், செயற்குழுவையும், தலைமை நிர்வாகக் குழுவையும், கூட்டுதல். பொதுக்குழுவும், செயற்குழுவும் அவ்வப்போது முடிவெடுக்கும் திட்டங்களையும், தீர்மானங்களையும் செயற்படுத்துதல் - கழக அமைப்புகளின் பொதுத் தேர்தல்களையும், இடைத் தேர்தல்களையும் நடைத்தி வைத்தல் - தணிக்கைக்குழு மூலம் கழகத்தின் எல்லா அமைப்புகளின் வரவு செலவுகளை ஆராய்தல் - கழகத்தின் நிலையங்கள், நிருவனங்கள் அசையும் - அசையா சொத்துக்கள் அனைத்துக்கும் உரிமைப் பொறுப்பையும், நிர்வாகப் பொறுப்பையும் வகித்தல் - அந்த சொத்துக்களை பற்றி எழும் சட்டப்படியான பிரச்சனைகளில் கழகத்தின் சார்பில் நடைவடிக்கைகளில் ஈடுபடுதல் - கழகத்தின் மீது தொடுக்கப்படும் எல்லாவித வழக்குகளிலும் கழகத்தின் சார்பில் வழக்காடுதல், கழகத்தின் சார்பில் வழக்குகளைத் தொடுத்தல், கழக விதிமுறைகளுக்கும், கொள்கை குறிக்கோள்களுக்கும் சட்ட திட்டங்களுக்கும், கட்டுப்பாட்டுக்கும் மாறாக நடக்கும் கழக அமைப்பின் மீதோ, நிர்வாகி மீதோ அல்லது தனிப்பட்ட உறுப்பினர் மீதோ, ஒழங்குநடவடிக்கை எடுத்தல் - கழகத்தின் எல்லா அமைப்புகளிலிருந்தும் நிறைவேற்றப்படும் ஒழுங்கு நடவடிக்கை தீர்மானங்களின் மீது இறுதித் தீர்ப்புக் காணுதல் - மற்றும் கழகத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் அமைப்பு முறைகளையும் வளர்க்கவும், காப்பாற்றவுமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் பொதுச் செயலாளரின் அதிகார வரம்புக்கு உட்பட்டதாகும்.

பிரிவு **: 8** பொதுக் குழு, செயற்குழு தலைமை நிர்வாகக் குழு கூடாத நேரங்களில் அரசியல் நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள் பற்றிய கொள்கை - திட்டம் ஆகியவற்றைப் பற்றிய விதி 16 பிரிவு 2 க்கு ஏற்ப தக்க முடிவுகள் எடுக்கப் பொதுச்செயலாளருக்கு உரிமை உண்டு. அந்த முடிவுகளுக்கான ஒப்புதலை, அடுத்துக் கூடும் செயற்குழுவில் ஒப்புதல் பெற வேண்டும். செயற்குழு கூடாத நேரங்களில் குறிப்பிடப்பட்ட அரசியல் நிகழ்ச்சி. நடவடிக்கைகள் பற்றிய செயற்குழு உறுப்பினர்களின் கருத்துகளைப் பொதுச்செயலாளர் - கடிதம் மூலம் கேட்டும் ஒப்புதல் பெறலாம்.

பிரிவு **: 9** கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தின் நிதியைச் சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு வங்கியிலோ (Bank) அல்லது நிதியிலோ **(Fund)** நடை முறைக்கணக்கிலும் **(Current account)** சேமிப்புக்கணக்கிலும் **(Savings account)** நிலையான கணக்கிலும் **(Fixed deposit)** செலுத்தவும், எடுக்கவும் கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தின் தேவையை முன்னிட்டு கழகத்தின் பொறுப்பில் மேற்படி நிருவனங்களில் கழக உடமைகளின் பெயரில் கடன் வாங்கவும், கொடுக்கவும், இவை காரணமாகத் தேவைப்படும் நடவடிக்கைகளில் கழகத்தின் சார்பாக ஈடுபடவும் பொதுச்செயலாளருக்கு உரிமை உண்டு.

பிரிவு **: 10** கழக நிதிக்கான கணக்குகள் வைத்திருக்கும் வங்கியில் அல்லது வங்கிகளில், தமது சார்பில் – தமது பிரதிநியாகப் பணம் போடவும், எடுக்கவும் மற்றும் வங்கி சம்பந்தப்பட்ட வகையில் பிரிவு 9ல் கண்டுள்ளவைகளை மேற்கொண்டு நிறைவேற்றவும், தேர்ந்தெடுக்கப்பட்ட கழகப் பொருளாளருக்கு அதிகாரமளிப்பதற்குப் பொதுச் செயலாளருக்கு உரிமை உண்டு.

பிரிவு **: 11** பொதுச்செயலாளர், சட்டதிட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பணிகள் – கொள்கை சம்பந்தப்பட்ட முடிவுகள் – கழகத்தின் நிர்வாகப் பொறுப்புகள் – அனைத்தையும் கழகத் தலைவருடன் கலந்து முடிவெடுத்து நிறைவேற்ற வேண்டும்.

பிரிவு **: 12** கழகத் தலைவர் விலகினாலோ அல்லது நீண்ட நாட்களுக்கு கழகப் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டாலோ, புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் கழகத் தலைவருக்கென சட்டதிட்டத்தில் வரையறுக்கப் பட்டுள்ள அதிகாரங்களை பொதுச் செயலாளரே மேற்கொள்வார்.

## விதி **: 18** பொருளாளர்

பிரிவு **: 1** கழகத்தின் வரவு - செலவு கணக்குகளின் நிர்வாக பொறுப்புகளை வகிப்பவர் கழக பொருளாளர் ஆவார்.

பிரிவு **: 2** உறுப்பினர்களின் கட்டணத்தில் இருந்து கிடைக்கும் தொகை, கழகப் பொது - சிறப்பு மாநாடுகளின் மிச்சத்தொகை, நிறுவனங்கள் - நிலையங்கள் - அசையும் அசையா சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தொகை, தலைமை நிலையதின் சார்பில் தலைமை நிலையத்துக்காக நன்கொடையாக திரட்டப்படும் தொகை, நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள் - சிறப்புக்கூட்டங்கள் - காட்சிகள் முதலியவைகளின் முலம் கிடைக்கும் தொகை

போன்றவைகளை எல்லாம் பொதுச்செயலாளர் சார்பாகப் பெற்றுத் தலைமைக்கழகத்தின் நிதியாக வரவு வைத்துக் கொண்டும், தலைவர் - பொதுச்செயலாளர் இருவரும் அனுமதிக்கும் செலவினங்களுக்கும் இருப்பிலிருந்தும் பொருள் கொடுத்தும், அந்த வரவு - செலவுக் கணக்குகளை முறையாக நிர்வாகித்து வரவேண்டியது பொருளாளரின் பொறுப்பாகும்.

## விதி : 19 துணைப் பொதுச்செயலாளர்கள்

பொதுச்செயலாளரால் தரப்படும் பொறுப்புளை ஏற்று, அவர் சார்பில் அவைகளை நிறைவேற்றுதல் துணைபொதுச்செயலாளரின் பொறுப்பாகும்.

## விதி : 20 தலைமைக் கழகச் செயலாளர்கள்

பொதுச்செயலாளரால் அந்தந்த துறைக்கென தரப்படும் பொறுப்புகளை ஏற்று, அவர் சார்பில், அவற்றை நிறைவேற்றுதல் தலைமைக் கழகச் செயலாளர்களின் பொறுப்புகளாகும்.

## விதி : 21 தலைமைச் செயற்குழு

பிரிவு : **1** கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர்கள், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர், தலைமை கழகச் செயலாளர்கள், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள், மாநகரச் செயலாளர்கள், மாநில அமைப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் இருந்தும், தலைமைச் செயற்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், தணிக்கைக் குழுவினர், சட்ட திட்டத் திருத்தக் குழுவினர், தொழிலாளர் முன்னேற்ற சங்கத் கழகத் தலைவர், தொழிலாளர் முன்னேற்ற சங்க கழகப் பொதுச்செயலாளர், சட்டமன்ற பேரவை, மேலவை, நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் கொ.மு.க கட்சித் தலைவர்கள், பொதுக்குழு உறுப்பினர்களில் இருந்து பொதுச்செயலாளரால் செயற்குழுவிற்கென நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டதே தலைமைச் செயற்குழுவாகும்.

பிரிவு : **2** தலைமைச் செயற்குழு குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடும்.

பிரிவு : **3** தலைமைச் செயற்குழுக் கூட்டத்திற்குக் கழகத் தலைவர் தலைமை வகிக்க வேண்டும். தலைவர் இல்லாதபோது கூடியுள்ள செயற்குழு உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

பிரிவு : **4** நாட்டு நிலை, கழகப் பணிகள் ஆகியவைகளை அவ்வப்போது செயற்குழு ஆராய்ந்து தேவையான முடிவுகளை எடுக்கத் தலைவருக்கும், பொதுச்செயலாளருக்கும் ஆலோசனை கூறும்.

## விதி : 22 தலைமை நிர்வாகக்குழு

பிரிவு : **1** கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர்கள், உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தணிக்கைக் குழுவினர், சொத்துப் பாதுகாப்புக் குழுவினர், தீர்மானக் குழுவினர், தொழிலாளர் முன்னேற்ற சங்கத் கழகத் தலைவர், தொழிலாளர் முன்னேற்ற சங்க கழகப் பொதுச்செயலாளர், சட்டப் பேரவை, மேலவை, நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் கொ.மு.க கட்சித் தலைவர்கள் ஆகியோரைக் கொண்டதே தலைமை நிர்வாகக் குழுவாகும்.

பிரிவு : **2** கழகத்தின் அன்றாட நடவடிக்கைகள், அரசியல் நிலவரங்கள், நாட்டின் மற்ற நிலைமைகள், கழக அமைப்புளின் நடவடிக்கைகள் ஆகியவற்றை அவ்வப்போது ஆராய்ந்து, அதற்கேற்ப கழகத்தை நடத்திச் செல்ல தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் தலைமை நிர்வாகக் குழு ஆலோசனை வழங்கும்.

பிரிவு : **3** தலைமை நிர்வாகக் குழு தேவைப்படும் போதேல்லாம் கூடும்.

பிரிவு : **4** தலைமை நிர்வாகக் குழு கூட்டத்திற்குக் கழகத் தலைவர் தலைமை வகிப்பார். தலைவர் இல்லாதபோது பொதுச்செயலாளர் தலைமை வகிக்க வேண்டும்.

## விதி : 23 தலைமை நிலையம்

பிரிவு : **1** தலைமைக் கழகத்தின் அன்றாட அலுவல்களை நிறைவேற்றவும், கழகத்தின் எல்லா அமைப்புளுடனும் தொடர்பு கொள்ளவும் தலைமை நிலையம் ஒன்று கொங்கு நாட்டின் மைய்யப் பகுதியான **46 - சம்பத் நகர், ஈரோட்டில் 638 011** இருக்கும்.

பிரிவு : **2** தலைமை நிலையம் பொதுச்செயலாளர் பொறுப்பில் இயங்கும்.

## விதி : 24 உயர்நிலை செயல் திட்டக் குழு

பிரிவு : **1** கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர்கள், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் மற்றும் பொதுச்செயலாளரால் நியமிக்கப் பெறும் உறுப்பினர்களுடன் 20க்கு மேற்படாதவர்களைக் கொண்ட தலைமைக் கழக உயர் நிலை செயல் திட்டக்குழு ஒன்று அமையும், இந்த உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள், இந்தப் பொறுப்பின் காரணமாக தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும இடம் பெறுவார்கள்.

## விதி : 25 தணிக்கைக் குழு

பிரிவு : **1** பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் நால்வரும், பொதுச் செயலாளரால் நியமிக்கப்படும் மூவரும் ஆக ஏழு (7) பேர் தணிக்கைக் குழுவில் இடம் பெறுவர்.

பிரிவு : **2** கழகம் சம்பந்தப்பட்ட எல்லா அமைப்பின் வரவு செலவுகளையும் தணிக்கை செய்து பொதுச்செயலாளரிடம் அறிக்கை தருதல் தணிக்கைக் குழுவின் பொறுப்பாகும்.

## விதி : 26 சொத்துப் பாதுகாப்புக் குழு

பிரிவு : **1** கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் பொதுச்செயலாளரால் பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப் பெறும் ஏழு உறுப்பினர்கள் ஆக பத்து பேர் கொண்டது சொத்துப் பாதுகாப்புக் குழுவாகும்.

பிரிவு : **2** தலைமைக் கழகம் மற்றும் கழக அமைப்புளுக்குச் சொந்தமான எல்லா அசையும் சொத்துக்களும், அசையாச் சொத்துக்களும் சொத்து பாதுகாப்புக் குழுவின் கண்காணிப்பின் கீழ் வந்துவிட்டதாகக் கருதப்படும்.

பிரிவு : **3** கழகத்தின் பல்வேறு அமைப்புகளினால் வாங்கப்படும் சொத்துக்களை கொங்குநாடு முன்னேற்றக் கழகத்திற்காகப் பொதுச்செயலாளரின் பேரில் **(KONGUNADU MUNNETRA KAZHAGAM REPRESENTED BY THE GENERAL SECRETARY)** வாங்கப்படுவதாகப் பத்திரங்களில் குறிப்பிடப்பட வேண்டும்.

பிரிவு : **4** சொத்துக்களை வாங்குவது, விற்பது, வாடகைக்கோ, குத்தகைக்கோ விடுவது குறித்து, பொதுச்செயலாளர் சொத்துப் பாதுகாப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

பிரிவு : **5** சொத்துக்கள் சம்பந்தப்பட்ட எல்லாச் சட்டப் பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவும், வழக்குகளை நடத்தவும், கழகத்திற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் எதிர் வழக்காடவும் பொதுச்செயலாளர் அதிகாரம் பெற்றவராவார்.

## விதி : 27 ஆட்சிமன்றக் குழு

பிரிவு : **1** கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்களுடன் கழகம் ஈடுபடும் எல்லா பொதுத் தேர்தல்களிலும் நிலைகளை ஆராய்ந்து கழகச் சார்பில் போட்டியிடுவோர் குறித்து பரிந்துரை செய்ய அவசியம் ஏற்படும் போது தலைமைக் கழகம் தேவைக்கேற்ப ஆட்சி மன்றக் குழுவையோ துணைக் குழுவையோ அமைத்துக் கொள்ளும்.

பிரிவு : **2** கழகம் ஈடுபடும் எல்லாத் தேர்தல்களிலும் தொகுதி நிலைகளை ஆராய்ந்து கழகச் சார்பில் போட்டியிடுவோர் குறித்து இக்குழு முடிவு செய்யும்.

பிரிவு : **3** அவசியம் ஏற்படும் போது தலைமைக் கழகம் ஆட்சி மன்றக் குழுவின் பணிக்குத் துணையாகத் துணைக்குழுக்களை அமைத்துக் கொள்ளும்.

## விதி : 28 <u>கழகத் தேர்தல்</u>

பிரிவு : **1** தலைமைக் கழகம் அவ்வப்போது அறிவிக்கும் தேர்தல் விதிமுறைப்படி கிளைக்கழகம் முதல் தலைமைக் கழகம் வரையிலான குழுக்கள் உள்ளிட்ட அமைப்புகளின் தேர்தல் நடைபெற வேண்டும்.

பிரிவு : **2** கழக அமைப்புகளின் பொதுத்தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவில் நடைபெறும்.

பிரிவு : **3** கழக அமைப்புகளின் பொதுக் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால் பொதுச் செயலாளரால் அறிவிக்கப்படும் குறிப்பிட்ட காலத்திற்குள் உறுப்பினர்களைச் புதுப்பித்தல் - புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்தல் ஆகியவைகள் முறையாக நடைபெற வேண்டும்.

பிரிவு : **4** மேற்குறிப்பிட்டவாறு புதிதாகச் சேர்க்கப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் அமையும் உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்படும் பொதுக் தேர்தல், பொதுச்செயலாளர் குறிப்பிடுகின்ற நாட்களில் முறையே கிளைகள், பேரூர்க் கழகங்கள், நகர - நகரியக் கழகங்கள், ஒன்றியக் கழகங்கள், மாநகரக் கழகங்கள், பகுதிக் கழகங்கள், மாவட்டக் கழகங்கள், மாநில அமைப்புக் கழகங்கள், தலைமைக் கழகம் ஆகியவற்றின் தேர்தல்கள் நடைபெற வேண்டும்.

பிரிவு : **5** ஊர்க்கிளை, உட்கிளைகளாக நகர - நகரியங்களிலும், பேரூராட்சி வார்டுகளிலும் அமைந்துள்ள வார்டுக் கிளை நிர்வாகிகள், பிரதிநிதிகள் தவிர்த்து கழகத்தில் எல்லா அமைப்புகளிலும் (பேரூர் - நகர - ஒன்றிய - பகுதி - மாநகர - மாவட்டக் கழக நிர்வாகிகள், கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய மாநகர வார்டுக் கிளை நிர்வாகிகள் மேலமைப்புப் பிரதிநிதிகள் உட்பட) நடைபெறும் தேர்தல்களில் போட்டியிட விரும்புவோர், நியமனம் பெறுவோர் பின்வரும் தகுதிகளை பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

(அ) தலைமைக் கழக்த்திற்கு எந்தவொரு வகையிலான கணக்குகளின் அடிப்படையிலாவது பாக்கி இருந்தால், அதனைச் செலுத்தி பாக்கியை தவிர்த்துக் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) நடைமுறைக் காலத்தில் ஒழுங்கு நடவடிக்கைக்கோ, நம்பிக்கை இல்லாத் தீர்மாத்திற்கோ ஆட்படாதவராய் இருத்தல் வேண்டும்.

பிரிவு : **6** பொதுச்செயலாளரால் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் தமது உறுப்பினர் உரிமையை புதுப்பித்துக் கொள்ளாதவர்கள் ஏற்கனவே வகித்து வந்த உறுப்பினர் உரிமை உள்ளிட்ட எல்லா உரிமைகளையும் இழந்தவராவார்கள்.

பிரிவு : **7** குறிப்பிட்ட கால வரையறைக்குள் தங்களை உறுப்பினராகப் புதுப்பித்துக் கொள்ளாதவர்கள், பிறகு உறுப்பினர்களாகச் சேர்வார்களேயானால் அவர்களும், கழகத்தால் அறவே நீக்கி வைக்கப்பட்டுப் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களும், கழகத்திலிருந்து விலகிப் பின்னர் சேர்ந்து கொள்பவர்களும் புதிய உறுப்பினர்களாகவே கருதப்படுவார்கள்.

பிரிவு : **8** மாநகர அமைப்புளின் வார்டு கிளைகள் தேர்தல்களைத் தலைமைக் கழகமே ஆணையாளர்களை அனுப்பி நடத்தும். ஏனைய மாவட்டங்களைச் சார்ந்த ஊர்க்கிளை, வார்டுக்கிளைத் தேர்தல்கள் அவ்வப்போது பொதுச் செயலாளர் அறிவிப்பின்படி மேற்படி கிளைகளின் தேர்தல் நடைபெறும்.

பிரிவு : **9** தவைமைக் கழக அளவிலான அமைப்புகளின் நிர்வாகப் பொறுப்புளுக்கு நடைபெறும் தேர்தலில் போட்டியிடுவோர் பதிவாகிச் செல்லுபடியான வாக்குகளில் சரிபாதிக்கும் மேல் (50 சதவிகிதத்திற்கு மேல்) வாக்குகளைப் பெற்றவர்களே வெற்றி பெற்றதாக் கருதப்படுவார்கள். சரிபாதிக்கு மேல் யாரும் வாக்குகள் பெறவில்லையெனில் அதிக அளவில் வாக்குகள் பெற்றுள்ள முதல் இரு வேட்பாளர்கள் தவிர ஏனைய வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு, மீண்டும் தேர்தல் அப்போதே நடைபெற வேண்டும். அதிக அளவில் வாக்குகள் பெற்றுள்ள வேட்பாளர்களின் வாக்கு எண்ணிக்கை சமமாக அமைந்துவிடுமாயின் குலுக்குச் சீட்டின் மூலம் போட்டிக்குத் தகுதியான வேட்பாளர்கள் நிர்ணயிக்கப்படுவார்கள்.

பிரிவு : **10** மேல் அமைப்புளில் அலுவலாளர் பொறுப்புகளில் வெற்றி பெறுவோர், கீழ் அமைப்புளில் ஏதேனும் நிர்வாகப் பொறுப்புளில் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலோ, நியமிக்கப்பட்டிருந்தாலோ அந்தக் கீழமைப்பின் பொறுப்பிலிருந்து விலகி விட்டதாகக் கருதப்படும்.

பிரிவு : **11** கீழ் அமைப்பிலிருந்து பிரதிநிதியாக மேல் அமைப்புகுத் தேர்ந்தெடுக்கப்படுபவர், மேல் அமைப்பில் ஏதேனும் ஒரு அலுவலாளர் பொறுப்பை ஏற்க வேண்டி நேரிட்டால், கீழ் அமைப்பின் பிரதிநிதிப் பதவியை விட வேண்டிய அவசியமோ, கீழ் அமைப்பின் செயற்குழுக் கூட்டம் – பொது உறுப்பினர் கூட்டம் ஆகியவைகளில் கலந்து கொள்ள வேண்டிய அவசியமோ இல்லை.

பிரிவு : **12** மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகரிய, நகரக் கழக நிர்வாகிகள் ஆகியோர் தமது பொறுப்பினை முழுநேரப் பணியாக நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, தொழிற்சங்க அமைப்புளில் எந்த நேரடிப் பொறுப்பும் ஏற்கலாகாது.

பிரிவு : **13** கழகத்தின் ஒரு பொதுக் தேர்தலுக்கும் மற்றொரு பொதுக் தேர்தலுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட அமைப்புகோ அல்லது ஒரு பதவிக்கோ அல்லது பதவிகளுக்கோ தேர்தல் நடைபெற வேண்டிய நிலைமை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட அமைப்புகள், தங்களுக்கு மேலேயுள்ள அமைப்பின் அனுமதியைப் பெற்று முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும்.

பிரிவு : **14** ஊர்க்கிளை, வார்டு கிளை ஆகியவைகளில் நடைபெறும் இடைத் தேர்தல்களில், கழகப் பொதுத் தேர்தல்களின் போது வாக்களித்தவர்களுடன், பொதுத் தேர்தலுக்குப் பிறகு உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டவர்கள் தங்களுடைய உறுப்பினர் உரிமைச் சீட்டினைப் பெற்று ஓராண்டு காலம் கடந்த பின்னரே வாக்களிக்கவோ, தேர்தலில் போட்டியிடவோ உரிமை பெற்றவர்கள் ஆவர்.

பிரிவு : **15** ஓர் அமைப்பின் தேர்தலில் ஏற்படும் தகராறுகளை அந்த அமைப்பின் அடுத்த மேல் அமைப்பு முறையே தீர்த்து வைக்க முயலும்.. இம்முறைப்படி, இறுதியாக மாவட்டக் கழகத்தால் தீர்த்து வைக்க முடியாதவைகள் மட்டுமே, பொதுச்செயலாளரின் முடிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். பொதுச்செயலாளரின் முடிவு முறைப்படி அறிவிக்கப்படுவதற்கு முன்னால் வேறு எந்தவிதமான முறைகளையும் உறுப்பினர்கள் கையாளக்கூடாது. அப்படி ஈடுபடுவோர் மீது தமது முடிவின்படி நடவடிக்கை எடுக்கப் பொதுச்செயலாளருக்கு உரிமை உண்டு.

பிரிவு : **16** தேர்தலில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி மேற்சொன்னபடி பொதுச்செயலாளர் எடுக்கின்ற முடிவே இறுதியான முடிவு ஆகும்.

பிரிவு : **17** பொதுத் தேர்தலைப்பற்றிய முடிவுளானாலும், இடைத் தேர்தலைப் பற்றிய முடிவுகளானாலும், அதன் முழு விவரங்களின் படிகள் (நகல்) எடுக்கப்பட்டு எல்லா மேலமைப்புகளுக்கும் ஒவ்வொரு படி (நகல்) அனுப்பப்பட வேண்டும்.

பிரிவு : **18** கழகத்தின் எல்லா மாவட்டத்திலும் ஒவ்வொரு அமைப்பின் செயற்குழுவிலும் மகளிர் தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தால், அப்படிப்பட்ட அமைப்பின் செயற்குழுவில் மகளிர் ஒருவர் கட்டாயம் இடம்பெறும் வகையில் சம்பந்தப்பட்ட செயற்குழுவினர் முடிவு செய்து மகளிர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

பிரிவு : **19** தேர்தல் கூட்டத்தின் கோரம் (Quorum) (குறை நிறை வெண்) சம்பந்தப்பட்ட அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கை 25 முதல் 200 வரை இருந்தால் குறைந்த அளவு கோரம் சரிபாதி இருக்க வேண்டும். 201 முதல் 500 வரை உறுப்பினர் எண்ணிக்கை இருந்தால் மூன்றில் ஒரு பங்கு (1/3), 501 முதல் 1000 வரை இருந்தால் நான்கில் ஒரு பங்கு (1/4), 1000க்கு மேற்பட்டிருந்தால் ஐந்தில் ஒரு பங்கு (1/5) கோரம் இருக்க வேண்டும்.

பிரிவு : **20** பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளில் ஒன்றோ, அல்லது அனைத்துமோ ஏதாவது காரணங்களால் காலியாகுமானால் அப்படிக் காலியாகும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பொதுக்குழு கூட்டப்பட்டு காலியான பதவி அல்லது பதவிகளுக்கு முறைப்படி தேர்தல் நடைபெற வேண்டும்.

## விதி : 29 <u>கழகத் துணை அமைப்புகள் - சார்பு மன்றங்கள்.</u>

அனைத்து கழகத் துணை அமைப்புகளும், சார்பு மன்றங்களும், தலைமைக் கழகதின் அனுமதியைப் பெற்றும், கட்டுப்பாட்டுக்குள்ளும், வழிகாட்டுதலின் பேரிலும் இயங்கும். துணை அமைப்புகளின் அனைத்து வரவு - செலவு கணக்குகளும் தலைமைக் கழகத்தின் தணிக்கைக்கு உட்பட்டதாகும்

## 1 - இளைஞர் அணி

பிரிவு **: 1** இளைஞர் அணி, கழக அமைப்புகளின் துணை அமைப்பாக ஒன்றியங்களிலுள்ள ஒவ்வொரு ஊர்களிலும் அமைந்து, அந்தந்த ஊர்க் கிளையுடன் தொடர்பு கொண்டு இயங்கும். ஊர்க்கிளை இல்லாத ஊர்களில் - ஒன்றியக் கழகச் செயலாளரின் இசைவு பெற்றும், கட்டுப்பட்டும் இயங்க வேண்டும். பேரூராட்சிகள், நகராட்சிகள், நகரியங்கள், மாநகராட்சிகளின் வார்டுகளிலும் (வட்டங்களிலும்) அமைந்து அந்தந்த வார்டு கிளையோடும் (வட்டக் கிளையோடும்) தொடர்பு கொண்டு இயங்கும்.

பிரிவு **: 2** உறுப்பினர் கட்டணம் ரூ. 10/= (பத்து) செலுத்தப்பட வேண்டும்.

பிரி¾ **: 3** 22 வயது முதல் 35 வயது வரையுள்ள இளைஞர்கள் இதில் உறுப்பினராகச் சேர்ந்து பணியாற்றலாம். வயதுத் தகுதியுடைய இளைஞர் அணி உறுப்பினர்கள் கழகக் கிளையிலும் உறுப்பினராக இருக்கலாம். ஆனால் இளைஞர் அணி நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள் கழக அமைப்பகளில் நிர்வாகிகளாக இருத்தல் கூடாது.

பிரிவு **: 4** இளைஞர் அணிக்கென, மாவட்ட, அளவில் ஒரு அமைப்பாளரையும், இரு மாவட்டத் துணை அமைப்பாளரையும், மாநில ஒன்றிய - நகர - நகரிய - மாநகர - பகுதி அமைப்பாளர்களையும் நியமித்துக்கொள்ளலாம். அந்த நியமனங்கள் அந்தந்த மாவட்டச் செயலாளகளைக் கலந்து மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களையும், மாநில, ஒன்றிய, நகர, நகரிய, மாநகரப் பகுதிக் கழகச் செயலாளர்களையும் கலந்து கொண்டு, மாநில, ஒன்றிய, நகர, நகரிய, மாநகரப் பகுதிக் கழக இளைஞர் அணி அமைப்பாளர்களையும், பொதுச் செயலாளரின் அனுமதியோடு தலைமைக் கழக இளைஞர் அணிச் செயலாளர் நியமிப்பார். அப்படி நியமிக்கப்படும் மாவட்ட, மாநில – மாநகர - ஒன்றிய - நகரிய - நகர - பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணிக்குரிய வயதுத் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

பிரிவு **: 5** சிற்றூர் இளைஞர் அணியில் 10 பேருக்கும், பேரூர் - நகர - நகரிய – மாநகரங்களில் வட்ட அளவில் 20 பேருக்கும் குறையாமல் உறுப்பினராக இருந்தால்தான் அணி அமைப்பது தகுதியுடையதாகும். அணியின் நிர்வாகத்திற்கு அவைத்தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் மற்றும் 10 உறுப்பினர்களுக்கு ஒரு செயற்குழு உறுப்பினர் என்னும் விகிதத்தில் செயற்குழு உறுப்பினர்கள் 5 பேர் வரை தேர்ந்தெடுக்கப்படலாம். கழகப் பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்ற கழகப் பிரச்சார நிகழ்ச்சிகள் நடத்த முற்படும்போது, சம்பந்தப்பட்ட கழகக் கிளையின் செயலாளருக்கு அல்லது கிளை அமையாத ஊராயிருப்பின் தொடர்புடைய அடுத்த மேலமைப்புச் செயலாளருக்கு முன்னதாக அறிவித்து அனுமதி பெற்று நடத்தலாம்.

பிரிவு **: 6** இளைஞர் அணி தோழர்கள் எதிர்காலத்தில் தாய்க் கழகத்தில் நிர்வாகப் பொறுப்பிற்கு வர விரும்பினால் இளைஞர் அணியில் உறுப்பினரான காலத்தையும் ஏற்று 5 (ஐந்து) ஆண்டு உறுப்பினர் தகுதி கணக்கிடப்பட்டு ஏற்கப்படும்.

## 2 - மகளிர் அணி

பிரிவு **: 7** பெண்குலத்தின் உரிமையையும், பெருமையையும் பாதுகாக்கும் வகையில், கழகத்தின் கொள்கை கோட்பாடுகளையும் திட்டங்களையும் தாய்மார்கள் அறிந்திடும் வண்ணம் பணியாற்றிடவும், கழக நடவடிக்கைகளிலும் நிகழ்ச்சிகளிலும் மகளிர் ஆர்வமுடன் பங்கு கொள்ளச் செய்யவும், ஊர்தோறும் கழக அமைப்புகளின் உறுதுணையோடு தலைமைக் கழகம் வகுக்கும் முறைப்படி இயங்கும்.

பிரிவு **: 8** குறைந்தது பத்து உறுப்பினர்கள் கொண்ட கிளை அமைப்புகளைக் கிராமங்களிலும், 20 உறுப்பினர் கொண்ட கிளை அமைப்புளை நகரங்களிலுள்ள வார்டுகளிலும் அமைத்து செயல்படலாம்.

## 3 - மாணவர் அணி

பிரிவு : **9** கொங்கு நாடு கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், தொழிற்கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களிடையில் அமைந்து, இலக்கிய ஆர்வத்தையும், பேச்சு - எழுத்து ஆற்றலையும், வளர்க்கும் பணிகளில் ஈடுபடும்.

பிரிவு : **10** இந்த அணி செம்மையாகச் செயல்படத் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படும் மாணவர் அணிச் செயலாளருடன் மாநில அளவில் 6 (ஆறு) துணை அமைப்பாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் சேர்ந்து மாவட்டந்தோறும் மாவட்ட அமைப்பாளரையும், துணை அமைப்பாளர் இருவரையும் தலைமைக் கழக அனுமதியோடு நியமிப்பர். மாவட்ட அமைப்பாளர்கள் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், தொழிற்கல்வி நிலையங்கள் ஆகியவைகள் ஒவ்வொன்றும் தனித்தனி மாணவர் அணிக் கிளைகளை அமைத்து செயல்படுவர்.

## <u>**4 -** தொழிலாளர் அணி</u>

பிரிவு : **11** தொழிலாளர்களின் முன்னேற்றம் – உரிமை – நல்வாழ்வு ஆகியவற்றைக் காக்கவும், வளர்க்கவும் அதற்கெனத் தனிச் சட்ட திட்டங்களுடன் அமைக்கப்பட்டுள்ள கொங்குநாடு பொதுத் தொழிலாளர் பேரவை (பதிவு எண் **1319** கோவை **- 08-10-2009)** என்னும் மத்திய தொழிற்சங்க அமைப்பு தலைமைக் கழகத்தறகுக் கட்டுப்பட்டு ஆலோசனைகளை ஏற்றுச் செயல்படும்.

பிரிவு : **12** கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக உள்ள தொழிலாளர்கள், தொழிலாளர் முன்னேற்றப் பேரவையுடன் இணைந்த சங்கங்கள் இருக்கும் இடங்களில் கழகச் சங்கங்களில் மட்டுமே உறுப்பினராகச் சேர்ந்து பணியாற்றிட வேண்டும்.

பிரிவு : **13** தொழிலாளர் முன்னேற்றப் பேரவையை சார்ந்த தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் கொங்குநாடு முன்னேற்றக் கழகத் தோழர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவோ, அறவே நீக்கி வைக்கவோ விரும்பினால், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கமாக இருந்தாலும், கழகமாக இருந்தாலும் தலைமைக் கழகத்தின் அனுமதி பெற்றே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பிரிவு : **14** கொங்குநாடு பொதுத் தொழிலாளர் பேரவையின் வரவு - செலவு கணக்குகளை கொங்குநாடு முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வேண்டும் பொழுது கொங்குநாடு பொதுத் தொழிலாளர் பேரவையின் பொதுச்செயலாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

## <u>**5 -** விவசாய அணி</u>

பிரிவு : **15** விவசாயிகளின் வாழ்வில் வளம் சேர்க்கவும், விவசாயத் தொழிலில் ஏற்படும் குறைகளைப் போக்கவும், பணியாற்றும் வண்ணம் ஊர்களிலும், ஒன்றிய அளவிலும், மாவட்ட அளவிலும் கொங்குநாடு விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் எனும் பெயரில் அமைப்புளை ஏற்படுத்திக் கொண்டு, தலைமைக் கழகத்தின் ஆலோசனையைப் பெற்று இயங்கும்.

## <u>**6 -** விவசாயத் தொழிலாளர் அணி</u>

பிரிவு : **16** விவசாயத் தொழிலார்களுக்கு உரிய ஊதியம் கிடைக்கச் செய்யவும் சட்டபூர்வமான உரிமைகளை பெற்றுத்தரவும் அவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணவும் ஊர்களிலும் - ஒன்றிய அளவிலும் - மாவட்ட அளவிலும் கொங்குநாடு விவசாயத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் என்னும் பெயரில் அமைப்புளை ஏற்படுத்திக் கொண்டு தலைமைக் கழக வழிகாட்டுதலுடன் இந்த அணி இயங்கும்.

## <u>**7 -** வழக்கறிஞர் அணி</u>

பிரிவு : **17** தலைமைக் கழகத்தால் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் - கழக வழக்கறிஞர் அணி அமைக்கப்படும். அரசியல் காரணங்களுக்காக கழகத் உறுப்பினர்கள் சந்திக்கின்ற வழக்குகளில் அவர்களுக்கு உதவும் வகையில் தலைமைக் கழகம் வகுத்தளிக்கும் விதிமுறைகளுப்பேற்ப இந்த அணி இயங்கும்.

## <u>**8 -** மருத்துவர் அணி</u>

பிரிவு : **18** தலைமைக் கழகத்தால் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் கழக மருத்துவர் அணி அமைக்கப்படும்

## **9 -** பொறியாளர் அணி

பிரிவு **: 19** தலைமைக் கழகத்தால் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் பொறியாளர் அணி அமைக்கப்படும்.

பிரிவு **: 20** பொதுச்செயலாளர் தேவைக்கு ஏற்ப துணை அமைப்புக்களை ஏற்படுத்த முழு அதிகாரம் உண்டு.

## விதி **: 30** மாநாடுகள் ( மாவட்ட மாநாடு )

பிரிவு **: 1** மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாவட்டக் கழக மாநாட்டை, தலைமைக் கழக அனுமதியுடன் மாவட்டக் கழகம் நடத்த வேண்டும்.

பிரிவு **: 2** மாவட்டக்கழக உறுப்பினர்களே மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழுவின் உறுப்பினராவார்கள். மாவட்டச் செயலாளரே வரவேற்புக்குழுத் தலைவராவார்.

பிரிவு **: 3** மாவட்டக் கழக மாநாட்டின் தலைவர், திறப்பாளர் ஆகியவர்களை வரவேற்புக்குழு தேர்ந்தெடுக்கும்.

பிரிவு : 4 அந்தந்த மாவட்டத்தின் ஊர்க்கிளை, வார்டுக்கிளை ஆகியவற்றின் செயலாளர்களும், மேலமைப்புப் பிரதிநிதிகளும் மாவட்ட மாநாட்டின் பிரதிநிதிகளாவர்.

பிரிவு **: 5** மாவட்ட மாநாட்டின் வரவு - செலவுக் கணக்குகளை மாநாடு முடிந்த 30 நாட்களுக்குள் மாநாட்டு வரவேற்புகுழு பரிசீலனை செய்து, பின்னர் தணிக்கைக் குழு பார்வைக்கு வைக்கப்பட்டு தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

பிரிவு **: 6** மாநாட்டில் மிச்சப்படும் தொகையை எப்படிப் பயன்படுத்துவது என்பதைத் தலைமைக் கழகம் அந்தந்த மாவட்ட கழகங்களோடு கலந்து முடிவு செய்யும்.

### பொது மாநாடு

பிரிவு **: 7** கழகப் பொது மாநாடு கழகத் தலைவர் தலைமையில் பொதுச் செயலாளரைத் திறப்பாளராகக் கொண்டு நடைபெறும்.

பிரிவு **: 8** பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டின் வரவேற்புக் குழுவினர் ஆவார்கள். மாநாடு எந்த மாவட்டத்தில் நடைபெறுகிறதோ, அந்த மாவட்டத்தின் மாவட்டக் கழகச் செயலாளரே பொது மாநாட்டின் வரவேற்புக குழுத்தலைவர் ஆவார்.

பிரிவு **: 9** பொதுக்குழு உறுப்பினர்களும், எல்லா மாவட்டக் கழக உறுப்பினர்களும், மாநில அமைப்புக் கழக உறுப்பினர்களும், மாநகர் மாவட்டக் கழக உறுப்பினர்களும் பொது மாநாட்டுப் பிரதிநிதிகள் ஆவார்கள்.

பிரிவு **: 10** பொது மாநாட்டின் மிச்சத் தொகை முழுவதும் தலைமைக் கழகத்திற்கே சேரும்.

பிரிவு **: 11** பொது மாநாட்டின் வரவு செலவுக் கணககுகள் தணிக்கைக் குழுவால் பரிசீக்கப்பட்டு அடுத்து நடக்கும் பொதுக்குழுவில் வைக்கப்படும்

### சிறப்பு மாநாடு

பிரிவு **: 12** கழக நடவடிக்கைகள் - நாட்டு நிலைமைகளைப் பொறுத்து அவசர முடிவுகள் எடுக்கச் சிறப்பு மாநாடு கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தலைமைச் செயற்குழு சிறப்பு மாநாட்டை நடத்தும்.

### சிறப்பு நிகழ்ச்சி

பிரிவு : 13 கழகத்தின் எந்த அமைப்புகளானாலும் கழகத்தைச் சார்ந்த தனிப்பட்டவர்களானாலும், தங்களின் தேவைக்காக நடத்தப்படும் நிதி நிகழ்ச்சிகள் எதுவாயினும் மாவட்டக் கழகத்தின் மூலம் தலைமைக் கழகத்தின் அனுமதி பெற்றுத்தான் நடத்த வேண்டும். முன் அனுமதியின்றி நிகழ்ச்சி நடத்துவோர் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உரியவராவர்.

## விதி : 31 கூட்டம் நடத்தத் தேவைப்படும் குறைந்த எண்ணிக்கை (கோரம்)

பிரிவு : 1 கழகத்தின் எல்லா அமைப்புகளின் பொது உறுப்பினர் கூட்டங்களுக்கு ஐந்தில் ஒரு பகுதியும், செயற்குழுக் கூட்டங்களுக்கு மூன்றில் ஒரு பகுதியும், உறுப்பினர்கள் வருகை தந்தால்தான் கூட்டம் நடைபெறுதல் வேண்டும்.

(அ) அறிவித்து அனுமதி பெறாமல் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து வருகை தராதவர்கள் பதவியை இழந்தவராவர். மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து வராத உறுப்பினர்களுக்கு, அந்த அமைப்பின் செயலாளர், சம்பந்தப்பட்ட உறுப்பினருக்குக் குறித்த காலத்தில் முறைப்படி அறிவிக்க வேண்டும். அந்த அமைப்பு விரும்பினால் அந்த உறுப்பினரின் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அவரை மீண்டும் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளலாம்.

## விதி : 32 கூட்டம் நடத்துவதற்கு அளிக்க வேண்டிய அறிவிப்பு கால அளவு

பிரிவு : 1 செயற்குழுக் கூட்டங்கள் கூட்ட, மூன்று நாட்கள் முன்னதாகவும், மற்ற அமைப்புக் கூட்டங்கள் கூட்ட ஏழு நாட்கள் முன்னதாகவும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

பிரிவு : 2 அவசர அவசியத்தை முன்னிட்டுக் கூட்டப்படும் அவசரக் கூட்டங்களுக்கு கால அளவு தளர்த்தப்படலாம். இதற்குக் காரணம் கூறி, அடுத்து முறையாக நடத்தப்படும் கூட்டத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.

பிரிவு : 3 ஓர் அமைப்பின் மூன்றில் ஒரு பகுதி எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, கூட்டத்தைக் கூட்டுமாறு அந்த அமைப்பின் செயலாளரைக் கேட்டுக் கொண்டால், விண்ணப்பம் கிடைத்த 15 நாட்களுக்குள் அந்த அமைப்பின் கூட்டத்தை கூட்டியாக வேண்டும்.

பிரிவு : 4 அவ்வாறு கூட்டத் தவறினால் மேலமைப்புககு விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் கிடைத்த ஒரு மாதத்திற்குள் மேலமைப்பின் செயலாளர் அந்த அமைப்பினைக் கூட்ட வேண்டும்.

## விதி : 33 விலகல்

பிரிவு : 1 எந்த ஓர் உறுப்பினரோ, அலுவலாளரோ கழகத் தொடர்பிலிருந்தோ அல்லது அலுவல் தொடர்பிலிருந்தோ தாமாக விலகிக் கொள்ள விரும்பினால், காரணங்களுடன் தாம் உறுப்பினராக இருக்கும் அமைப்புக்கு அறிவிக்க வேண்டும்.

பிரிவு : 2 கிளையின் அலுவலாளரோ தனி உறுப்பினரோ விலகினால், அவரது விலகல் கடிதத்தை, அந்தக் கிளையின் செயற்குழு ஒப்புதலுடன் ஒன்றிய - நகர - நகரிய - பேரூர் - பகுதிக் கழகம் மூலமாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

பிரிவு : 3 கிளைக் கழகத்திற்கு மேலுள்ள ஓர் அமைப்பின் அலுவலாளரோ, உறுப்பினரோ விலகினால் அவரது விலகல் கடிதத்தை அந்த அமைப்பின் செயற்குழு ஒப்புதலுடன் அதற்கு மேலுள்ள அமைப்பின் மூலமாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

பிரிவு : 4 விலகும் அலுவலாளர் தம்மிடமுள்ள கழகம் சம்பந்தமான நிதி, உடமைகள், ஏடுகள், கணக்கு விவரங்கள், பொறுப்புகள் முதலியவற்றை உடனடியாகத் தமக்கு மேலாகவுள்ள அலுவலர்களிடமும், இல்லையாயின் தமக்கு அடுத்தபடியாக உள்ள அலுவலர்களிடமும் ஒப்படைக்க வேண்டும். குறிப்பிட்ட அமைப்பில் உள்ள எல்லா அலுவலர்களும் விலகிக் கொண்டால் அந்த அமைப்பின் நிதி, உடைமைகள், ஏடுகள், கணக்கு விவரங்கள், பொறுப்புகள் அனைத்தும் அதற்கு மேலுள்ள அமைப்பின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விதி : **34** <u>நம்பிக்கையில்லாத் தீர்மானம்</u>

பிரிவு : **1** கழக அமைப்புகளின் பொறுப்பிலிருக்கும் அலுவலாளர்கள் மீது முறைப்படி கொண்டு வரப்படுவதே நம்பிக்கையில்லாத் தீர்மானமாகும். ஓர் அமைப்பின் அலுவலாளர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட அமைப்பின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்கள், தக்க காரணங்களைக் காட்டி தங்கள் கையெழுத்துடன், அந்தத் தீர்மானத்தை, அந்த அமைப்பின் செயலாளருக்கும், அதன் படிகளை (நகல்கள்) மேல் அமைப்புளுக்கும், தலைமைக் கழகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும். ஓர் அமைப்பின் செயலாளர் மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால், மேலமைப்பின் செயலாளருக்கும், அதன் படிகளை அதன் மேலமைப்புகளுக்கும், தலைமைக் கழகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

பிரிவு : **2** தீர்மானம் கிடைக்கப் பெற்ற பதினைந்து நாட்களுக்குள் அந்த அமைப்பின் உறுப்பினர் கூட்டத்தை, மேல் அமைப்புச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, செயலாளர் கூட்ட வேண்டும்.

பிரிவு : **3** மேற்படி கூட்டத்திற்கு - மேல் அமைப்புச் செயலாளரோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற மேலமைப்பின் பிரிதிநிதியோ தலைமை வகிக்க வேண்டும்.

பிரிவு : **4** நம்பிக்கையில்லாத் தீர்மானக் கூட்டத்தை சம்பந்தப்பட்ட அமைப்பின் செயலாளர் குறிப்பிட்ட காலத்திற்குள் கூட்டாவிட்டால் மேல அமைப்பின் செயலாளர் தலைமைக் கழகத்திற்கு அறிவித்து விட்டு, அந்தக் கால வரம்பிற்கு அடுத்த 15 நாட்களுக்குள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

பிரிவு : **5** நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற, குறிப்பிட்ட அமைப்பின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்றாக வேண்டும்.

பிரிவு : **6** நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டால், அதன் மூலம் விலக்கப்படும் அலுவலர் தம்மிடமுள்ள கழக நிதி, உடமைகள், ஏடுகள் கணக்குகள், பொறுப்புகள் முதலியவற்றை தமக்கு மேலாக உள்ள அலுவலரிடம் - இல்லையாயின் தமக்கு அடுத்த அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பிரிவு : **7** ஓர் அமைப்பில் நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அடுத்து மேலுள்ள அமைப்பின் மூலம் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

பிரிவு : **8** நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 30 நாட்களுக்குள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆளான அலுவலாளரோ, அமைப்போ அதில் குறைகாணின் பொதுச்செயலாளரிடம் நீதி வேண்டி மேல்முறையீடு k செய்து கொள்ளலாம்.

பிரிவு : **9** நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அலுவலாளரோ அல்லது அமைப்போ, அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 30 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யத் தவறினால், அடுத்த நாள் முதல் – அலுவலராய் இருப்பின் தாம் வகித்து வந்த பதவிகளையும் அல்லது அமைப்பாயிருப்பின் அது இயங்கும் உரிமையையும் இழந்ததாகக் கருதப்படும்.

விதி : **35** <u>ஒழுங்கு நடவடிக்கை</u>

பிரிவு : **1** கழகத்திலுள்ள எல்லா உறுப்பினர்களும் அமைப்புளும், அமைப்பிலுள்ள அலுவலாளர்களும் கழகத்தின் கட்டுப்பாடுகளுக்கும் ஒழுங்கு நடவடிக்கை முறைகளுக்கும் உட்பட்டவராவர்.

பிரிவு : **2** கழகத்தின் கொள்கை - குறிக்கோளுக்கு முரணான வகையில் செயல்படுதல் – கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில் நடத்தல் - கழகத்தின் சட்டதிட்டங்களுக்கும், மேலுள்ள அமைப்புளுக்கும் கட்டுப்படாதிருத்தல் - கழகத்தின் முடிவுளை நிறவேற்ற மறுத்து மாறுபட்டுக் காரியமாற்றுதல் - கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொள்ளுதல் போன்றவைகளுக்காகத் தனிப்பட்ட உறுப்பினர் மீதோ, அமைப்பின் மீதோ, அலுவலாளர் மீதோ ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பிரிவு : **3** தலைமைக் கழக நிர்வாகக் குழு, செயற்குழு, பொதுக்குழு அல்லாத பிற அமைப்புகளான மாநிலக் கழக அமைப்புகள், மாவட்டக் கழகம், மாநகரக் கழகம், ஒன்றியக் கழகம், பகுதிக் கழகம், நகர - நகரியம் - பேரூர், வட்டக்கிளை, ஊர்க்கிளை ஆகிய

அமைப்புகளில் அந்த அமைப்புககு உட்பட்டவர் மீதோ அல்லது உட்பட்ட அமைப்பின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் கூடி அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் வாக்களித்து மேலமைப்புகளுக்கும், தலைமைக் கழகத்திற்கும் பரிந்துரை செய்ய வேண்டும்.

பிரிவு : **4** கண்டிப்பது அல்லது எச்சரிப்பது அல்லது குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளி வைப்பது அல்லது கழகத்திலிருந்து விலக்குவது ஒழுங்கு நடவடிக்கைமயாகும்.

பிரிவு : **5** ஒழுங்கு நடவடிக்கையின் போது குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளி வைப்பதற்கும், கழகத்திலிருந்து விலக்குவதற்கும் இறுதி அதிகாரம் பொதுச்செயலாளருக்கு மட்டுமே உண்டு. தனிப்பட்ட உறுப்பினர், அலுவலாளர், அமைப்பு ஆகியவைகளை அறவே விலக்கியோ அல்லது கலைத்தோ ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அதனை முறைப்படி பொதுச்செயலாளரிடம் இறுதி முடிவுக்குப் பரிந்துரை செய்யும் அதிகாரம் மட்டுமே சம்பந்தப்பட்ட அமைப்புக்கோ அல்லது மேலமைப்பு செயலாளருக்கோ உண்டு. செய்யப்படும் பரிந்துரையை ஏற்று பொதுச்செயலாளர் ஒப்புதல் அளித்த பின்னரே தள்ளி வைத்தல் அல்லது கலைத்தல் பற்றிய வெளிப்படையான அறிவிப்புளை சம்பந்ப்பட்ட அமைப்பு அல்லது மேலமைப்புச் செயலாளர் வெளியிட வேண்டும்.

பிரிவு : **6** பிரிவு 2 இன் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குற்றத்திற்கு உள்ளானவரை உடனடியாகத் தள்ளி வைக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படின், மேலமைப்பின் செயலாளர், பொதுச்செயலாளரின் அனுமதியுடன் தற்காலிகமாக அவ்வாறு தள்ளி வைக்கலாம்.

பிரிவு : **7** ஓர் உறுப்பினர் மீதோ அல்லது அமைப்பின் மீதோ ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு அவர் மீதோ அல்லது அமைப்பின் மீதோ உள்ள குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக்காட்டி, ஒரு வார காலத்தவணை குறிப்பிட்டு "ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது" என்று விளக்கங் கேட்டு அறிய வேண்டும்.

பிரிவு : **8** அசாதாரண அவசிய நேர்வுகளில் கழக அமைப்பின் மீதோ, சார்பு மன்றத்தின் மீதோ, தனிப்பட்ட உறுப்பினர் மீதோ, எந்தவொரு அமைப்பின் அலுவலாளர் மீதோ இந்த விதியின் பிரிவு 4ன் படி ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நேரடி அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு. தற்காலிகமாகத் தள்ளி வைக்கப்பட்டவர்களுக்கு கழக நடவடிக்கைகளில் ஈடுபடவோ, வாக்களிக்கவோ உரிமை கிடையாது.

பிரிவு : **9** ஒழுங்கு நடவடிக்கைகளின் மீது முடிவு எடுக்கப்பட்ட நாளிலிருந்து அது நடைமுறைக்கு வந்ததாகவே கருதப்படும். நடவடிக்கைக்கு ஆளானவர்கள் நீதி வேண்டிப் பொதுச்செயலாளரிடம் விண்ணப்பித்தால் அந்த நடவடிக்கைகளை, அதன் மேல் விசாரணை முடியும் வரை பொதுச்செயலாளர் நிறுத்தி வைக்கலாம்.

பிரிவு : **10** தள்ளிவைப்பது அல்லது விலக்குவது போன்ற ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட ஒருவர் அல்லது அமைப்பு தம்மிடமுள்ள கழக உடமைகள், ஏடுகள், கணக்குகள், பொறுப்புகள் அனைத்தையும தமக்கு மேலுள்ள அலுவலரிடமோ, அமைப்பிடமோ இல்லையெனில் அடுத்த அலுவலரிடமோ உடனடியாக ஒப்புவித்து விடவேண்டும்.

பிரிவு : **11** தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து ஒன்றியச் செயலாளர்கள், ஆண்டிற்கு குறைந்த பட்சம் பத்து (10) பொதுக்கூட்டங்களையும், நகரச் செயலாளர் ஐந்து (5) பொதுக்கூட்டங்களையும், பேரூர்ச் செயலாளர் மூன்று (3) பொதுக் கூட்டங்களையும், நடத்திட வேண்டும். மேலும் கழகக் கொள்கை பரப்பும் நாளேடு ஒன்றினையும் கட்டாயம் வாங்கிட வேண்டும். இதன்படி பொதுக் கூட்டங்களை நடத்தாத செயலாளர்கள் மீதும், கழக நாளேடு ஒள்றுக்கு சந்தாதாரராக இல்லாத செயலாளர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிரிவு : **12** ஒழுங்கு நடவடிக்கைகளில் நீதி வேண்டி வரும் விண்ணப்பங்களைத் தலைமைக் கழகம் நேரடியாகவோ அல்லது அதிகாரம் பெற்ற ஒருவரையோ அல்லது ஒரு குழுவையோ கொண்டு பரிசீலனை செய்து நீதி வழங்கும்.

பிரிவு : **13** ஒழுங்கு நடவடிக்கைகளைக் குறித்துப் பொதுச்செயலாளர் எடுக்கும் முடிவே இறுதி முடிவாகும்.

## விதி : **36** <u>பொதுக்குழு உரிமை</u>

பிரிவு : **1** கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் கொள்கை குறிக்கோள் விளக்கங்களையும், சட்டதிட்ட விதிகளையும் இயற்றவும், திருத்தவும், நீக்கவும் பொதுக்குழுவே உரிமை

படைத்ததாகும். அதற்குப் பொதுக்குழுவைக் கூட்டி வருகை தந்துள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மை எண்ணிக்கையினர் ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.

பிரிவு **: 2** கழக அமைப்புக் குறித்தும் இதில் சொல்லாமல் விடுபட்ட இதர எஞ்சியிருக்கும் பொருள்கள் குறித்தும் இறுதி முடிவு செய்யும் அதிகாரம் பொதுக்குழுவிற்கே உண்டு.

## கொங்கு செழித்தால் எங்கும் செழிக்கும்

## முடியும் முடியும் நம்மால் முடியும்